# ENCOUNTERS OF SPRITUAL KIND

## ஆன்மீக வழியிலே அவ்விசுவாசுகளை சந்திக்கிற முறைகள்

By. Rev. DAVID KOENIG

ரெவரண்ட் - திரு. டேவிட் க்யூனிக்



" I have given you an example to follow, Do as I have done to you."

# ஆன்மீக வழியிலே அவ்விசுவாசிகளை சந்திக்கிற முறைகள்

## அவ்விசுவாசிகளே நம் நோக்கம்

அவ்விசுவாசிகளானவர்களுக்கு நாம் மட்டும் இல்லாமல் வேறொருவரு கவனித்து சபைக்குத் தெரிவிப்பதற்கு அவர்கள் பிரத்யேக மான ஜீவியம் உள்ளவர்கள் அல்ல. தினந்தோறும் நம் அன்றாட ஜீவியத்தில் நாம் கலந்துக் கொள்கின்ற சாதாரண மனுஷர்களே அவ்விசுவாசிகள், சூப்பர் மார்க்கட், குமாஸ்தா, அலங்கரிப்பவர், வங்கியில் வேலைசெய்பவர், ஆசிரியர், நம் பக்கத்துவீட்டுக் காரர்கள், இல்லையென்றால் நம் சிநேகிதர்கள் இவர்கள் எல்லாரும் கூட நம் சபை சுவிஷேசத்தின் மூலம் கலந்துக் கொள்ள வேண்டிய அவ்விசுவாசிகளே.

யாருக்கு இயேசுகிறிஸ்து இரட்சகராக அவசரமோ அவர்களே நம்முடைய அடையாளமாய் இருக்கிறார்கள். நம் சாட்சிய முறையில் கிறிஸ்துவை தெரியாத பிரதி ஒவ்வொருவரையும் நம் இலக்காக தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இன்னொரு இரகம் என்னவென்றால் புதியதாக நம் சபையின் எல்லைக்குட்பட்ட கிறிஸ்தவன் கிறிஸ்துவைக் குறித்து தெரியாதவர்கள் உங்களுக்கு தெரியுமா? அவர்களுக்கு உடனே கர்த்தரை தெரியப்படுத்துங்கள். கிறிஸ்துவுக்காக மற்றும் சபைக்காக அவர்களை அணுக முயற்சி செய்யுங்கள்.

## உத்தேசம்

பரிசுத்த வேதாகமத்தில் இருக்கிற இந்த கீழ்கண்ட உதாரணத்துவத்தின் மூலம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து குறித்து மற்றவர்களுக்கு சரியான முறையில் சாட்சியம் கொடுக்கிற வழிகளை நாம் கற்றுக் கொண்டு முயற்சி செய்கிறோம். சுவிஷேசங்களை மற்றும் அப்போஸ்தலருடைய காரியங்களை வேதாகமத்தை தியானிப்பதின் மூலம் சரியான முறையில் இந்த உதாரணம் எடுக்கப்பட்டுள்ளது. இது என்னவென்றால் விசேஷமான முயற்சியின் மூலம் எடுக்கப்பட்டது மாத்திரம் அல்ல. பாஸ்கட்பால் முறையின்படி ஒருவரிடத்திலிருந்து மற்றொருவருக்கு தனிப்பட்ட முறையில் போய்ச்சேர்ந்த கொடுக்கப்பட்ட சாட்சியத்தின் உதாரணங்கள் மாத்திரமே. இந்த உதாரணங்களை இதுவரைக்கும் யாராவது விவரித்திருந்தாலும் அவற்றை

நாங்கள் ஆலோசிப்பது இல்லை. இந்த உதாரணங்களில் இருப்பவைகளை யாராவது சிறிய சிறிய விசுவாசிகளின் குழுக்களுக்கு இந்த சாட்சிய முறையை விவரித்தாலும் அவற்றைக் குறித்துக் கூட நாங்கள் ஆலோசிப்பது இல்லை. ஆனால் ஒருவரிடத்திலிருந்து மற்றவர்களுக்கு இந்த சாட்சி உதாரணங்கள் அவ்விசுவாசிகளானவர்களுக்கு போய்ச் சேர்ந்தடைய வில்லை என்பதே எங்களுடைய உத்தேசம்.

இது சாட்சியாக எடுத்துக் கொள்கிற ஒவ்வொருவரும் விசுவாசிகளாக மாறுவார்கள் என்று நாங்கள் பாவிக்க வில்லை, இந்த சாட்சி ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டதா இல்லையா என்பதே எங்கள் ஆலோசனை. நாம் தேவனுடைய சக்தியை, இரக்கத்தை அறிந்திருக்கிறோம். ஏசய்யா 55ம் அதிகாரம் பிரகாரம் தேவனுடைய வார்த்தை கர்த்தருடைய விருப்பத்தின்படி என்ன என்ன கற்றுக் கொடுக்கிறதோ என்பது நமக்கு தெரியாது. இதைச் சாட்சியாக எடுத்துக் கொண்ட கொஞ்சம் பேர் ஆகட்டும் அல்லது அநேகம் பேர் ஆகட்டுமட் இதை விசுவாசிக்காமற் போனாலும் நாம் அதற்காக கலங்கக் கூடாது. ஏனென்றால் மனுஷனுடைய வழியான கீழ்படியும் குணமில்லாத சுபாவமுடைய இருதயம் இருக்கிறது என்று நமக்குத் தெரியும்.

நம்முடைய சக்தி சாமார்த்தியத்தினால் பரிசுத்த ஆவியானவர் நியாயப் பிரமாணத்தின் மூலம் மற்றும் சுவிசேஷத்தின் மூலம் அவ்விசுவாசிகளுக்குள் கிரியை செய்யக் கூடும்.

ஆனால் துயரமான விஷயம் என்னவென்றால் நம்முடைய சக்தி சாமர்த்தியங்களை நாம் சரியாக உபயோகிக்காமல் போவதே. நம்முடைய அலட்சியம், அவசியமற்ற பயம், நமக்குள் இருக்கிற பலவிதமான பேதங்கள், வேறுபாடுகள் மற்றும் சந்தேகங்கள், நம் சுவிஷேச ஊழியத்தில் அவ்வப்பொழுது தடைகளை உண்டாக்குகிறது. இவ்வாறு நாம் கர்த்தருக்கு உபயோகட்படாத அற்ப விசுவாசம் உடையவர்களாகிப் போகிறோம். ஆனால் இந்த கீழ்கண்ட சரியான உதாரணத்துவத்தின்மூலம் மற்றவர்களுக்கு சரியாக அர்த்தம் செய்துக் கொள்கிற முறையில் சுவிஷேச சாட்சியம் சொல்லுவதற்கு வல்லமையுள்ளவர்களாவதற்கு நம்மை நாம் கட்டிக் கொரள்கிற முயற்சி செய்வோம். ஞானஸ்நானம் கொடுக்கிற யோவான்

மாதிரியாக நாமும் கூட கிறிஸ்துவை எல்லாருக்கும் காண்பித்து இதோ உலக பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி என்று சாட்சியம் சொல்லுவதே நம்முடைய கடைசி குறியாக, நோக்கமாயிருக்க வேண்டும். அது மாத்திரம் இல்லாமல் நாம் இந்த விஷயத்தில் நம்முடைய நிபுணத்துவத்தை இருதயப் பூர்வமாக தெரிவித்து எம்மாத்திரமும் அதிசயம் இல்லாமல் யோவானுடைய பக்தியின் மாதிரியாக அவர் என்னில் பெருகவும் நான் அவரில் சிறுகவும் வேண்டும் என்ற விஷயத்தை நாம் மறந்து விடாமல் கவனிக்க வேண்டியதிருக்கிறது. நமக்கு எவ்விதமான பிரத்யேகமான வரங்கள் இருந்தாலும், அவற்றை எவ்வளவு அற்புதமாக நாம் உபயோகித்தாலும், அவைகளின்மூலம் நம்மை நாம் மகிமைப்படுத்திக் கொள்வது அல்ல. அவைகளின்மூலம் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டியதாயிருக்கிறது என்ற விஷயத்தை நாம் எப்பொழுதும் மறக்கக்கூடாது. ஆகவே கிறிஸ்துவை அறியாதவர்களை நம்மோடு சேர்த்துக் கொள்வதன்மூலம் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி எப்பொழுதும் பார்க்க வேண்டும்.

## நீதிமானாக்கப்பட்ட பிறகு பசியோடும் தாகத்தோடும் இருப்பது லூக். 19:1-10

நீதிமானாக்கப்பட்ட பிறகு வார்த்தைக்காக எவ்வளவோ பசியோடும், தாகத்தோடும் இருக்கிறவர்களை கலந்துக் கொள்வதற்கு நாம் எவ்வளவோ கருணையோடு முயற்சி செய்கிறோம். ஏனென்றால் அவர்களுக்கு வார்த்தையைக் குறித்து சரியான விழிப்புணர்வு இல்லாமல் புதிய ஜீவியத்தில் வளர அநேக கேள்விகளுக்கு பதிலை தேடி, அவைகளுக்காக தப்பான இடங்களுக்குச் சென்றாலும் அவர்களுக்கு சரியான சமாதானம் கிடைக்காமல் அங்கேயே மறுபடியும் மறுபடியும் பதிலுக்காக தேடிக் கொண்டிருக்கிறவர்களாய் இருக்கிறார்கள். இவ்வாறு அவர்களுக்கு அவர்களே அந்த முடிச்சுள்ள சிக்கலான கேள்விக்கு பதிலுக்காக சிரமப்பட்டு கடைசியில் முயற்சிச் செய்யக்கூடாத நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். ஆனால் பதில் கிடைக்காத அந்த கேள்விக் குறித்து அவர்களுடைய மனச்சாட்சி அவர்களோடு எப்பொழுதும் பேசிக் கொண்டே இருக்கும். ஆகவே அவர்கள் தப்பு செய்தவர்களை போல மனசு முழுவதும் காலியாக நிம்மதியில்லாத நிலையில் இருப்பார்கள்.

சகேயுவுக்கு மக்கள் தன்னைக் குறித்து எவ்வளவு தப்பாக தன்னுடைய முகத்துக்கு எதிராகவே மாத்திரம் இல்லாமல் பின்னால்கூட சொல்லிக் கொள்வது கண்டிப்பாக தெரியும். இந்த நிலை அதிக காலமாக நடந்துக் கொண்டு இருக்கிறது. ஆகவே சகேயு மனம் உடைந்த நிலையில் இருந்தான். வரி வசூலிப்பனாக, பண பலம் இருக்கிறவனாக இருந்தாலும் கூட பிரச்சனைகளுக்கு பதில் கண்டு கொள்ள முடியாத நிலையில் இருந்தான். சகஜமாகவே அவனுடைய சொந்த ஜனங்களே அவருடைய குணம், அவனுடைய வேலைக் குறித்து தப்பாக பேசி அவனை பயங்கரமான, பகிரங்கமான பாவிகளோடு சேர்த்து விட்டார்கள். மக்கள் எந்த விதத்தில் ஆலோசனை செய்தார்களோ அதே விதத்தில் சந்தேகம் இல்லாமல் ரோமாபுரி உயர் அதிகாரிகள்கூட சகேயுவைக் குறித்து அதேவிதமான முறையில் நினைத்து இருக்க வேண்டும். ஏனென்றால், யூதர்கள் எப்படிப்பட்டவர்களோ அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சகேயு கூட தான் எவ்வளவு மோசமான முறையில் தன்னுடைய உத்தியோகத்தை செய்கின்றானோ, எவ்வளவு பேரைத் தன்னுடைய வரி வசூலிப்பின் மூலம் துக்கப்படுத்தினானோ அவனுக்கு நன்றாகத் தெரியும். இதே விஷயத்தை பின்னால் கர்த்தருடைய சமூகத்தில் ஒப்புக் கொண்டு அறிக்கையும் கூட செய்தான்.

இப்படிப்பட்ட கோரமான நிலையில் இருக்கிற ஒரு மனிதனை சந்திப்பதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வருகிறார். ஆனால் இந்த நிகழ்ச்சி தற்செயலாக கர்த்தருடைய சந்திப்பில் நடந்தது என்று நாம் நினைக்கக்கூடாது. ஏனென்றால் சகேயுவுக்கு எல்லாமிருந்தாலும்கூட தன்னுடைய சுற்றுப்புறத்தில் இருந்த எல்லாருடைய அன்பையும் இழந்தவனாய், அன்பு இல்லாத நிலையில் இருந்தான். அதனால் உத்தேசப்பூர்வமாகவே தன்னுடைய அன்பை சகேயுவுக்கு பகிர்ந்து கொடுப்பதற்கு சந்தித்தார். கர்த்தர் நம்மையும்கூட உத்தேசப்பூர்வமாகவே சுவிஷேசத்திற்காக அனுப்புகிறார் என்று நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய அன்பை எந்தெந்த சந்தர்ப்பங்களில் எங்கெங்கே பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கிறதோ அங்கங்கே கர்த்தர் நம்மை வைக்கிறார். ஆகவே தான் அவர் இந்த அவகாசத்தை நம்முடைய ஜீவிய வழியில் உத்தேசப் பூர்வமாக வைத்திருக்கிறார். இங்கே கர்த்தர் உத்தேச பூர்வமாக இல்லாமல் மிகவும் ஆழமாகப் பார்த்து பேசுகிறார். ஆகவே சகேயுவை கண்டுக் கொண்டார்.

கர்த்தர் தன்னுடைய தியானத்தை சகேயுமீது கேந்தரிக்க பண்ணினார். எல்லாராலும் சர்வ சாதாரணமாக அலட்சியம் செய்யப்பட்டவர்கள்மீது இரக்கம் உள்ள தியானம் கேந்தகரிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆத்துமாவும்கூட எவ்வளவோ விலையேறப்பட்டது. நம்முடைய கர்ததர் இந்த உலகத்திற்கு வந்தது பாவிகளை இரட்சிப்பதற்கே. ஆகவே பாவிகளில் ஒருவனான சகேயு இங்கே இரட்சிக்கப்படுகிறான். தேவனுடைய அன்பு மனுஷர்களுடைய ஊகத்திற்கு கிடைக்காதது. அதற்கும் அதிகமானது. நம்மீது இரக்கம் பாராட்டினவர்மீது நாம் இரக்கம் உள்ளவராய் இருக்கிறோமோ? நமக்குத் தெரிந்தவர்களுக்கு நாம் தெரியப்படுத்துகிறோமா? ஆனால் இங்கே உலகப் பிரகாரம் தனக்குத் தெரியாத நம் கெட்ட விரோதிகளுக்குக்கூட பிரார்த்தனை செய்வதே கர்த்தருடைய அன்புக்கு நிதர்ஷனம். தீமைக்கு பதிலாக நல்லதை கொடுப்பதே தேவனுடைய மிகப் பெரிய அன்புக்கு அர்த்தம். அன்புச் செலுத்தப்படாதவர்கள் மீது, அலட்சியம் செய்யப்பட்டவர்கள் மீது இலட்சய நோக்கம் வைப்பதே கர்த்தருடைய அன்புக்கு அர்த்தம். துடுப்பில்லாத, மற்றும் சுக்கான் இல்லாத படகில் மிதந்துக் கொண்டு பாவ இருட்டு நிரம்பிய ஜீவியச் சமுத்திரத்தில் எவ்வளவே பேர்கள் வழி தப்பிப் போகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடத்திற்கே நாம் சுவிசேஷசம் என்ற சுக்கானை மற்றும் துடுப்பினை எடுத்துக் கொண்டு போக வேண்டியிருக்கிறது.

வழியில் இருந்த சகேயுவை இலட்சியம் செய்வதோடு அல்லாமல், மற்றவர்களுக்கு விருப்பம் இல்லாமற் போனாலும் அவனுடைய வீட்டிற்கு போவதற்குக் கர்த்தர் ஆயத்தம் அனார். ஆனால் இந்த வேஷதாரமான உலகத்தில் கபளீசரம் செய்வதைக் காட்டிலும் சுவிஷேசத்தை மற்றவர்களுக்கு சேர்ப்பது என்பது மிகப் பிரதானமானதாயும், உன்னதமானதாயும் இருக்கிறது. அப்படிப்பட்ட சுவிசேஷசம் சேராத இடங்களில் வார்த்தையை சேர்ப்பதற்கு, கிடைக்கும்படிச் செய்வதற்கு நம்மை நாமே ஆயத்தம் செய்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வளவு நாட்கள் எப்போதும் மற்றவர்களுடைய அன்பை ருசிப் பார்க்காத சகேயு, கர்த்தருடைய உன்னதமான அன்பை ருசிப் பார்த்தப் பின்னால் சகேயுவினுடைய பிரதிகாரம் என்னவென்றால் அவன் சீக்கிரமாய் மரத்திலிருந்து இறங்கி சந்தோஷத்தோடே அவரை தன்னுடைய வீட்டில் சேர்த்துக் கொண்டான். அந்த பாவி காண்பித்த அந்த விஷேசமான அன்புக்கு பிரதிகாரமாக இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்று கர்த்தர் சொன்னார். கர்த்தரை விசுவாசித்தேன்,

பாவத்திற்காக மனம் வருத்தப்பட்டேன், பச்தாபப்பட்டேன் என்று சகேயு இந்த கீழ்கண்ட விதமாக தெரியப்படுத்துகிறான். சகேயு நின்று, கர்த்தரை நோக்கி, ஆண்டவரே , என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றார் நியாயப் பிரமானத்தின் கட்டளையின்படி செலுத்த வேண்டியதைக் காட்டிலும் மற்றும் அதிகமாக சகேயு திரும்பவும் செலுத்துகிறான். இதே ஜீவனுடைய கிறிஸ்து சுவிஷேசத்தில் இருக்கிற மிகப் பெரிய சக்தி.

கர்த்தர் அவன் எதிரே நிற்பது மாத்திரம் அல்லாமல் அவனுடைய இருதயத்திலேகூட ஜீவித்தார். பிரசுரிக்கப்பட்ட இந்த உதாரணத்தில் பாவியை எதிர்கொள்வதைக் குறித்து அதிகமாகச் சொல்லப்படவில்லை. சாட்சி சொல்லுவதற்கு தேவையான தேவனுடைய அன்பினுடைய உத்தேசத்தை தெளிவாக நாம் பார்க்க முடியும். வெளியில் நன்றாக காணப்படுகிறவர்களுக்காக மாத்திரமே கர்த்தருடைய சபை இல்லாமல் அது எல்லாருக்காகவும் என்று நாம் பார்க்க முடியும். எப்பொழுதும் கனவிலேகூட பார்க்காத, எப்பொழுதும் கலந்துக் கொள்கிற அபரிதமான நபரை நாம் எத்தனைத் தரம் நம் பக்கத்தில் ஆராதனையிலே உட்கார்ந்து கொண்டிருப்பதை பார்த்திருக்கிறோம் ஆனால் நாம் அக்கரைக் காட்டுவதில்லை, பொருட்படுத்துவதில்லை. ஆனால் தப்பிப் போனவர்களைத் தேடி இரட்சிப்பதற்கு கர்த்தர் இந்த உலகத்திற்கு வந்தார். இந்த உலகத்தில் அலட்சியம் செய்யப்பட்டவர்களை எப்பொழுதாவது நாம் சந்திக்கும்போது, நம்முடைய வார்த்தையை அவர்கள் கேட்கும்படியாக, அவர்களுடைய இருதயத்திலே நம்முடைய வார்த்தையை அவர்களுக்கு நல்ல நம்பிக்கையை உண்டாக்கும்படி நம் பரிபூர்ண தியானம் அவர்கள்மீது ஒருமுகப்படுத்தும் படியாக நாம் ஜெபிக்க வேண்டியிருக்கிறது. இந்த உதாரணத்தில் மற்றவர்களின் மேல் நாம் எப்படிப்பட்ட அன்பை காட்டுவதற்கு ஆரம்பிக்க வேண்டும் என்பதை தெளிவாக பார்த்திருக்கிறோம்.

## மதம் என்றால் கௌரமேயல்லாமல் அநேக சந்தேகங்கள் லூக். 7:36-50

கர்த்தருக்குப் பின்னால் விசுவாசம் இல்லாமல் கௌரவம் உடையவர்கள் அநேகரை நாம் நம்முடைய அன்றாட ஜீவியத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மேற்சொன்ன வாக்கியப் பாகத்தில் இருக்கிற பரிசேயன் கர்த்தருக்கு கௌரவம் காண்பித்தான் மற்றும் கர்த்தரை தன்னுடைய வீட்டிற்கு அழைத்து, வரவேற்று போஜனம் ஆயத்தம் செய்தான். அங்கேயே அது முடிந்துப் போனது. அங்கே பரிசேயனினுடைய விசுவாசம் இரட்சிப்புக்கு ஏதுவானதான இல்லை. சீமோன் என்ற இந்த பரிசேயன் இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசியாயிருந்ததால் ... என்று கர்த்தரைக் குறித்து சந்தேகித்தான். கர்த்தர் சீமோன் மனதை கிரகித்து இரண்டு பேர் கடன்பட்டவர்கள், ஒரு கடன் கொடுத்தவரைக் குறித்துச் சொல்லி சீமோன் மற்றும் பாவியான ஸ்திரீயை அவர்களோடு ஒப்பிட்டு நல்லச் சரியான உவமானத்தைச் சொன்னார். சீமோன் சுபாவத்தில் சுயநீதிக்காரனாயிருந்தான். இப்படிப்பட்ட குணம் உன்னைக் காட்டிலும் நான் மிகவும் பரிசுத்தமானவன் என்ற பாவனைக்கு வழி காட்டுகிறதாயிருக்கிறது. இந்த ஸ்திரீயானவள் யாரோ எப்படிப்பட்ட பாவ ஆத்துமாவை உடைய ஸ்தீரியோ, எப்படிப்பட்டவளோ என்று தனக்குத் தானே நினைத்துக் கொள்ளுகிறதினால் தன்னுடைய சுபாவத்தை காட்டினான்.

சீமோன் மனதிலே நினைத்துக் கொண்டதை கர்த்தர் கிரகித்தும்கூட அதைக் குறித்து வருத்தம் அடையவில்லை. சீமோன் எவ்வளவு சுய நீதிக்காரனாகயிருந்தாலும், கர்த்தர் சொன்னதைக் கேட்டான். கர்த்தர் சீயோனை முக முகமாய் எதிர்க் கொள்ளாமல், மனதில் இருப்பதை கௌரவமான முறையில் தெரிந்த முறையில் சந்திக்கிறார். சீமோன் மனதில் இருக்கிற ஆலோசனைகளை எடுத்துக் காண்பித்து அதற்காக மனம் பச்சதாபப்படு என்று கர்த்தர் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக மறைமுகமாக நல்ல கதையைச் சொன்னார். கேள்வி என்னவென்றால், ஐந்நூறு வெள்ளிக்காசு கடன் வாங்கிக் கொண்ட ஒருவன், மற்றும் ஐம்பது வெள்ளிக் காசு கடன் பெற்றுக் கொண்ட ஒருவன் என்று இருவருக்குக் கடன் கொடுத்தான். இருவரும் அவனுக்குக் கடன் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகம் இல்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க அவர்கள் எவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான் என்ற கேள்விக்கு சீயோன் பிரதியுத்திரமாக எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான். அதாவது ஐந்நூறு வெள்ளிக் காசு கடன் பெற்றுக் கொண்டவனே அன்பாயிருப்பான் என்ற பதிலுக்கு சீமோன் கட்டுப்பட்டான். இது நமக்கு தாவீதுக்கு பாவத்தை எடுத்துக் காண்பித்த நாத்தான்

கதையை ஞாபகப்படுத்துகிறது. ஆனால் சீயோன் குறித்து இங்கே அப்படிப்பட்டவை எதுவும் எழுதப்படவில்லை. கர்த்தர் சீயோனை உறுதியாக முக முகமாக எந்த முறையில் பச்சதாபம் குறித்தும் செய்த பாவத்திற்கு மன வருத்தமடைவதைக் குறித்தும் பதில் கேட்டு இருப்பாரேயானால் சீமோன் நிராசைப்பட்டு, இன்னும் அதிக வைராக்கியத்தோடு இருப்பதற்கு ஏதுவாயிருக்கும். இச்சந்தர்ப்பத்தில் சீமோன் பச்சதாப்படாமற் போனாலும் பரிசுத்த ஆவியானவர் ஒரு சரியான கதையின்மூலம் அவனுக்கு உலகத்தை தெளிவாய்ப் பிரித்துக் காட்டினார். இதனைக் கொண்டு நாம் கற்றுக் கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒரு அவ்விசுவாசி நம்முடைய சாட்சியை கேட்பதற்கு நம்மீது விசுவாசம் காண்பிப்பாரேயானால் நாமும் கூட மறைமுகமான முறையில் அனுசரிக்க வேண்டும். ஆனால் முக முகமாக அவர்களுடைய பாவத்தை எடுத்துக் காண்பிக்கக் கூடாது. நம் வார்த்தையைக் கேட்பதற்கு விருப்பப்பட்டு நம் கூட பேசுவதற்கு ஆத்திரத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பவனை நம் மனதில் இருக்கிற அசல் விஷயத்தை சொல்லுவதற்கு முன்பே அவர்களை விமர்சித்து அவர்களுடைய மனதை புண்படுத்தி, அவர்கள் முன் காலுக்கு கட்டுக்கட்டி அவர்களை தடை செய்வது எதற்கு? பின்னால் கர்த்தர் சீமோன் செய்யாததை மற்றும் அந்த ஸ்தீரியானவள் கண்ணீரினால் தன்னுடைய பாதங்களை நனைத்து தன்னுடைய தலை முடியினால் துடைத்தார். தன்னுடைய பாதங்களை ஓயாமல் முத்தம் இட்டாள் மற்றும் பாதங்களுக்கு பரிமள தைலம் பூசினதைக் குறித்து அவர்கள் இருவரையும் ஒருவரோடு ஒருவர் ஒப்பிட்டு தன்னுடைய மனதில் இருக்கிற அசல் விஷயத்தை வெளியே கொண்டு வந்தார். பாவ மன்னிப்பிலிருந்து உற்பத்தியான மெய்யான அன்பு என்னவோ சீமோனுக்கு இந்த கதையின்மூலம் சரியாகச் சொல்லப்பட்டது.

இதன்மூலம் சீமோன் தன்னைக் குறித்து தானே ஆலோசித்துக் கொள்வதற்கு ஒரு விஷயம் இருப்பதாக நாம் கூட இப்பொழுது வரைக்கும் நாம் நம்புகிறதைக் குறித்து இல்லாமல் எதைக் குறித்து நாம் ஆலோசிக்க வேண்டுமோ நமக்கு கற்றுக் கொடுக்கிறதாயிருக்கிறது. சீமோன் விஷயத்தில் பரிசுத்த ஆவியானவர் அவன் மீது பாவத்தைக் குறித்து எந்தக் குற்றமும் சுமத்துவது அவசரமாயிருக்கிறதோ அதுவே அவனுக்கு தெரிவிக்கப்பட்டது. அதே முறையில் அந்த ஸ்தீரியைக் குறித்து அவனுடைய காதுகளில் சொல்லப்பட்ட நல்லச் சரியான சுவிஷேசத்தை

வெளிப்படுத்துவதில் கர்த்தர் சமூகம் நம் கூட இருக்கிறதென்று கிரகித்து நாம் சாட்சியை மிகவும் தெளிவாக சொல்ல வேண்டியிருக்கிறது. கர்த்தர் சமூகம் நம்கூட இருக்கிறதென்று கிரகித்து நம் சாட்சி மிகவும் தெளிவாக சொல்ல வேண்டியிருக்கிறது. கர்த்தர் தன்னுடைய கதையில் சீமோனுக்கு ஆலோசனை செய்து கொள்வதற்கு நேரம் கொடுத்த மாதிரி நாமும் கூட மற்றவர்களை சிறிது அடையாளம் கண்டுக் கொள்வதற்கு ஏதுவாக உபயோகப்படுத்தக்கூடிய உதாரணங்கள், உவமானங்கள், வேதாகமத்தில் அதிகமாக இருக்கின்றன. ஆகவே நாம் சுவிஷேசம் அறிவிக்கும்போது உதாரணத்தோடு அறிவிப்பது அது மிகவும் உத்தமமானது. நாம் நினைக்கிற சந்தர்ப்பங்களுக்கு இந்த உதாரணங்கள் ஒவ்வொரு முறையும் எடுத்துக் கொண்டு போக முடியும். ஆனால் கடைசியில் நம்முடைய பிரசங்கங்களை அதுவே அற்புதமாக மாற்றக்கூடும். ஆகவே இந்த முறையில் நாம் எவ்வளவு அதிகமாக சுவிஷேச சாட்சியம் அறிவிக்கிறோமோ நம் பிரசங்கங்கள் அவ்வளவு சரியா, நன்றாக வருவதற்கு அவகாசமிருக்கிறது. அது மாத்திரம் அல்லாமல் பரிசுத்த ஆவியானவர் இன்னும் நன்றாக வார்த்தை பாகங்களை மற்றும் உதாரணங்களை நம் மனதிற்குள் கொண்டு வரக்கூடும்.

## ஏதோ ஒன்றின் மூலம் வசீகரிக்கப்பட்டு, நம்புகின்ற விவரங்களை கேட்கிறவன் மாற்.12:28-34

அவரை சிக்கலில் மாட்டிவிட வேண்டும் என்று அனுப்பி வைக்கப்பட்ட ஏரோதியர்களோடும், பரிசேயர்களோடும், இயேசு எந்த விதத்தில் சரியான சமாதானம் சொன்னாரோ விவரித்த மாற்கு பின்னால் அது பரிசேயர்களோடுகூட கர்த்தர் எந்த முறையில் சமாதானம் சொன்னாரோ விவரித்தார். இயேசு பார்த்த ஒரு நியாய சாஸ்திரி அவருடைய சமாதானங்களுக்கு சந்தோஷப்பட்டு கர்த்தரிடத்திற்கு வந்தான். மரித்தோர் உயிரோடே எழுந்திருப்பது இல்லை என்று சொல்லுகிற அந்த சதுசேயர்கள் போதனையை மற்றும் அவர்களுடைய சுபாவத்தினை சந்தேகமில்லாமல் அந்த நியாய சாஸ்திரிகூட அங்கீகரித்து இருக்க மாட்டான். இயேசு கிறிஸ்துவில் பிரகாசித்து எரிகிற ஆத்துமாவை அந்த சாஸ்திரி பார்த்தான். இது சாதாரணமாக இயேசுவினுடைய ஞானமில்லை. ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் இருக்கிற விஷயமே. சாஸ்திரி பிறகு இயேசுவை ஒரு கேள்வி கேட்டான்.

இயேசு கிறிஸ்து அந்த கேள்விக்கு சமாதானம் சொன்னப் பிறகு அதை பூர்த்தியாக கிரகித்து அந்த சாஸ்திரி அவர் சொன்னதை தான் ஏகமாய் ஏற்றுக் கொண்டான். அவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு கூட்டு அஸ்திபாரம் இருக்கிறதை நாம் பார்க்க முடியும். இதே விதமான முறையில் நம்முடைய சுவிஷேச சாட்சியம் கொடுக்கிறபோது நாமும்கூட ஒரு நல்ல அஸ்திபாரம் உண்டாயிருப்பது எவ்வளவோ முக்கியம். காரணம் அதே அஸ்திபாரத்தின் மேல் அந்த அவ்விசுவாசியும்கூட நம்பிக்கை உடையவனாய் நாம் சொல்லுகிறதை நன்றாக கேட்பதற்கு நல்ல உறவை ஏற்பாடு செய்துக் கொள்ளக்கூடும். இந்த உதாரணத்தில் இருக்கிற சாஸ்திரி நியாயப் பிரமாணத்தை அறிந்தவன் ஆயினும் சுவிஷேசத்தைக் குறித்து தெரிந்துக் கொள்ளவில்லை. இந்த உதாரணங்களினால் அந்த சாஸ்திரி கர்த்தர் சொன்ன நல்ல ஞானமுடைய பதில்களினால் வசீகரிக்கப்பட்டான். அதேவிதமான முறையில் நம்முடைய தனிப்பட்ட சாட்சிகள் மற்றவர்களுக்கு கேட்கிறபடியாக இருக்கும்போது அவர்கள்கூட நம்மைப்போல் விசுவாசம், நம்பிக்கையைப் பெற்று இன்னும் அநேகம் தெரியாத விஷயங்களைக் குறித்து நம்மைக் கேட்கும்படி நாம் எப்பொழுதும் ஆசிக்க முடியும். ஆனால் இவைகளேயல்லாமல் விவரங்கள் கேட்கிறவர்களை வசீகரிப்பதற்கு இன்னும் அநேக மற்ற விஷயங்கள்கூட இருக்கிறது. உதாரணத்திற்கு நம்முடைய நற் கிரியைகள் மற்றவர்களுக்கு காணப்படுகின்றதா? அல்லது நாம் அவைகளை அசல் செய்கின்றோமா? தேவனுடைய உன்னத பிரமானங்களில் இருக்கிற வார்த்தைகளை அங்கீகரிக்காமல் நம் ஜீவியத்திலே நம் நீதி சுபாவம் கட்டுத் திட்ட வழியில் இருக்கிறதா? இந்த முறையில் நம் ஜீவியம் இருக்குமேயானால் நாம் மற்றவர்களை வசீகரிக்க முடியுமா?

ஒன்றை மாத்திரமே கச்சிதமாக சொல்ல முடியும். அது என்னவென்றால் தீமையானதின்மூலம், கெட்ட காரியங்களின்மூலம் நாம் மற்றவர்களை வசீகரிக்க முடியாமற் போவதே அல்லாமல் அவர்களை நல்வழிப்படுத்த முடியாதவர்களாகிறோம். அவர்களை காப்பாற்ற முடியாதவர்களாகிறோம். கெட்டதை குறித்தே யாராயிருந்தாலும் எதற்கு கேட்கிறார்கள்? இது எப்படிச் செய்ய வேண்டுமோ நம் எல்லோருக்கும் தெரியும். யாராவது ஒரு அபிப்பிரயாயத்தைக் குறித்துச் சரி செய்துக் கொண்ட பின்னால் அதுக் குறித்து விவரங்கள் கேட்க வேண்டும் என்று எதற்கு நினைக்கிறார்கள்? ஆனால் இந்த தினங்களில் பிரபஞ்சத்தில் எங்குப் பார்த்தாலும் அதிகமாக இருப்பது இதுவே.

தனி நபர்களை சாட்சிகளாக மாற்றுவதற்கு, மற்றும் அவர்களோடு சம்மந்தம் ஏற்படுத்திக் கொள்வதற்கு நமக்கு மிக முக்யமாக தேவையாயிருப்பது சில விஷயங்களில் அவர்களோடு சாதாரணமாக கலந்து இருப்பது மற்றும் கூட்டு அஸ்திபாரம் உண்டாயிருப்பது என்பதே இந்த சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆயினும் அதைக் காட்டிலும் வேறே கேள்வியில்லை. அவர்களோடு சில கூட்டு அபிப்பிராயங்கள் இருப்பதற்கு நாம் முயற்சிக்கூட செய்ய வேண்டியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. நான் ஒரு வீட்டை சந்தித்து அவர்களுக்கு போதிப்பதற்கு சென்று அவர்களுடைய வீட்டை சமீபிக்கிறபோது அவர்களுடைய வீட்டின் முன்னால் ஒரு நல்ல ரோஜாத் தோட்டத்தை கவனித்தேன். ஆனால் நான் அவர்களுக்கு வார்த்தையை போதித்தப் பிறகு சொன்னேனோ அல்லது போதிப்பதற்கு முன்பே சொன்னேனோ எனக்கு ஞாபகம் இல்லையென்றாலும் நான் அவர்களுடைய ரோஜாத் தோட்டம் குறித்து சொல்லிக் கொண்டே எங்கள் தந்தை ஒரு முறை இப்படிப்பட்ட அழகான ரோஜாத் தோட்டத்தை எங்கள் வீட்டின் முன்புகூட வளர்த்தாரென்றும், அந்தத் தோட்டத்தின்மீது அதிகாரியாக என்னை நியமித்த சங்கதிகளை அவர்களோடு பகிர்ந்து கொண்டேன். ஆனால் இவ்விஷயங்களை அவர்கள்மீது புகாறாக நான் சொல்லாமல் அவர்களுக்கும் எனக்கும் ரோஜாத் தோட்டத்தின்மீது இருக்கிற நல்ல கூட்டு அபிப்பிரயாயத்தை சொல்லுவதற்கு பிரயத்தனம் செய்தேன். இதன்மூலம் அந்த வீட்டு எஜமான் நான் எதற்கு அவர்களை சந்திக்க வந்தேனோ ஒரு முறை கவனித்து நான் போதித்தவைகளை எவ்வளவோ அனுகூலத்துடனும் மற்றும் சிநேக ஒளியிலே அவற்றை அடையக்கூடும்.

நான் மறுபடியும் மற்றும் ஒரு முறை அந்த வீட்டை சந்திப்பதற்கு போனபோதுகூட அவர் அதற்கு முன்பு நான் போதித்தவைகளை மறக்காமல் நன்றாக ஞாபகம் வைத்திருக்கக்கூடும். இது பார்ப்பதற்கு மிகச் சிறிய விஷயமாயிருக்கிறது. ஆனால் இரண்டு பேர் மத்தியிலே உண்டாகிற நல்ல விஷயமாக இழந்து போகிற சுபவாத்தை எடுத்துப் போட்டு ஒரு நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு இது எவ்வளவோ உபயோகப்படக்கூடும். இதுக் கூட ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயமே, இந்நாட்களில் தன்னலத்தோடு மற்றும் கர்வத்தோடு இருக்கிற நாட்களை கவனித்துப் பார்த்தால், உண்மையான அக்கறையோடு மற்றவர்களைக் குறித்து சுயமாகத் தேடி விசாரிக்கிறவர்கள் ஒரு சிலப் பேர் மாத்திரமே. எப்பொழுதும்

பயனுடைய முடிவு வரும்படியாக ஆலோசனையில் நிதானமாக மற்றும் சீக்கிரமாக சுவிஷேச சாட்சியம் சொல்லுவதாக இல்லாமல், கிறிஸ்தவர்களாக நாம் யாருக்காக கிறிஸ்து மரித்துப் போனாரோ அவர்களுக்காக உண்மையான அக்கரையோடு சுவிஷேசம் அறிவிக்கப்பட வேண்டியிருக்கிறது. இது அன்பின் ஒரு பாகம் அல்லவா?

அது மாத்திரம் அல்லாமல் அவ்விசுவாசிகளை எதிர் கொண்டு அவர்களை கிறிஸ்துவுக்கு அனுகூலமாகவே செய்து நம்முடைய வேலையை முடித்தால் அவர்களுக்குள் மனந்திரும்புதல் உண்டாகாமற் போனால் அது உபயோகமற்றதாயிருக்கிறது. இயேசு கிறிஸ்து இந்த வாக்யப் பாகத்தில் நீ தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு தூரமாக இல்லை என்று அந்த சாஸ்திரியினிடத்தில் சொல்லுகிறார். அந்த சாஸ்தில் இதை சரியாக நன்றாக அர்த்தம் செய்துக் கொண்டான். எங்கே மெச்சிக் கொள்ள வேண்டுமோ அங்கே மெச்சிக் கொள்வது எதற்கு? இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மறுபடியும் அந்தச் சாஸ்திரி கர்த்தரை எப்பொழுதாவது சந்திக்கின்றபோது அவர்கள் இருவருக்கும் மத்தியில் தொடர்ந்து நடக்கிற நல்ல சம்பாஷனையை நாம் யூகிக்க முடியும்.

நாம் அவ்விசுவாசிகளை சந்திக்கின்ற முறை எப்பொழுதும்கூட நல்ல ஆத்துமாவாக இருக்க வேண்டும் என்று பிரயாசப்படுகிறோம். ஆனால் இது எல்லா நேரங்களிலும் தொடர்ந்து இருக்காது. உதாரணத்திற்கு ஒரு தனிப்பட்ட நபர் நாம் சொல்லுவதற்கு கடினமாக மறுதலித்தால் மற்றும் கேலியும் கிண்டலும் செய்தால் எப்படிப்பட்ட முடிவு அங்கே இருக்கும். நாம் சொல்ல வேண்டியதை அவருக்கு நன்றாக நல்ல விதத்தில் சொல்லாமல் அவர் நம்பினதே நல்லது என்ற அவகாசம் அவருக்கு கொடுப்போமானால் நாம் தப்புச் செய்தவர்களாவோம். ஆனால் இங்கே இந்த சாஸ்திரி கர்த்தர் சொன்னதற்கு எவ்விதமான எதிர்ப்பு பாவத்தையும் காட்டவில்லை.

அவ்விசுவாசிகளை சந்திக்கின்ற முறையில் ஒரு வேளை அவர்கள் சொல்லுகிறதில் ஏதாவது உண்மையிருக்குமாயின் அவர்களுக்கு நல்ல பதிலை கொடுப்பதில் தப்பேதுவும் இல்லை. ஆனால் அவற்றில் ஏதாவது இச்சக வார்த்தை இருக்குமேயானால் அவற்றிலிருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள

வேண்டியிருக்கிறது. கர்த்தர் ஒருவரே அந்த சாஸ்திரி குறித்து கொடுத்த வியாக்யானம் அல்லது புகழ்ந்தது நல்ல ஒழுங்கில் இருக்கிறது.

நம்முடைய ஜீவியத்தில்கூட இப்படிப்பட்ட பிரச்சனைகளை, எதிர்க்கொள்ள வேண்டுமாயின் அவர்களோடு பேசுவதற்கு அவர்களை தேட வேண்டியதாயிருக்கிறது மற்றும் கர்த்தருடைய சித்தத்தின்படி ஒவ்வொரு நாளும் கூட நாம் ஜீவிக்க வேண்டியிருக்கிறது. அது மாத்திரமேயல்லாமல் மற்றவர்கள்கூட நம்மோடு பேசி அவர்கள் நம்முடைய நற்கிரியைகளைப் பார்த்து அதன் பயனாக நம்மோடுகூட அவர்களும் கர்த்தருடைய கிருபை மற்றும் இரக்கத்திற்காக அவரை மகிமைப்படுத்தும்படி நாம் பிரார்த்தனை செய்ய வேண்டியிருக்கிறது.

**சமாதானத்தை பெற்றுக் கொண்டவர்கள் :-** தீர்ப்பின் மூலம் சமாானத்தை பெற்றுக் கொண்டவர்கள் அல்லது தீர்ப்புக்கு கிட்ட வந்ததினால் சமாதானத்தை பெற்றுக் கொண்டவர்கள் (யோ 8:3-12) அன்பின் நிமித்தம் சமாதானத்தை பெற்றவர்கள் (அப். 16:23-34).

மக்களால் பகிரங்கமாக விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அந்த ஸ்தீரியினுடைய பாவங்களை நாம் யூகிக்க முடியும். விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டவர்களை கல்லெரிந்து சாகடிப்பதே சரியான தண்டனை. அவன் தீர்ப்பினை அனுபவிக்க வேண்டியதேயல்லாமல் ஒரு பகிரங்க சபையில் அவள் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. கடினமான மனசுடைய எல்லார் முன்னாலும் குறுக்கு புத்தியையுடையவர்கள், குற்றம் கண்டுபிடிப்பவர்கள் மாத்திரமே செய்தது இது. தீர்ப்பு அவள்மேல் விழுவதற்கு ஆயத்தமாயிருந்தது.

பரிசேயர்களுடைய வேஷமே அவளை அவர்கள் முன்பு இழுத்துக் கொண்டு வருவதற்கு அவர்களை ஏவியது என்பது கர்த்தருக்கு முன்பே தெரியும். அவர்களுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. இந்தப் பாடத்தின் வழியில் அந்த ஸ்தீரிக்கு விடுதலைக்கூட தேவையாயிருக்கிறது. பெரியவர்கள் முதற்கொண்டு சிறியவர்கள் வரை ஒருவர் பின் ஒருவராக வரிசையாக வெளியே போய் விட்டதின்மூலம் அந்த ஸ்தீரியின்மீது இருக்கிற இருட்டு என்ற மேகம் எவ்வாறு எடுத்துப் போடப்பட்டது என்பதை நீ யூகிக்க முடியும்? எப்படிப்பட்ட உதவி ஆனால்

நான் செய்த தப்புக்கு அந்த தண்டனையை பெற வேண்டியிருக்கிறது என்று அந்த ஸ்தீரி அறிந்திருந்தால் ஆனால் அவளுக்கு மற்றும் ஒரு அவகாசம் கொடுக்கப்பட்டது. இல்லை கர்த்தாவே என்று அவன் சொன்னதில் ஒரு நல்ல போதகருக்கு கொடுக்க வேண்டிய கௌரவத்தைக் காட்டிலும் அதிகமாக கௌரவிப்பதாக பிரபுவே என்று அவள் கூப்பிட்ட வார்த்தையின்மூலம் நாம் பார்க்கக்கூடியது கஷ்டமானது அல்ல.

இங்கே கர்த்தர் சுவிஷேசத்தை பேசிக் கொண்டிருக்கிறார். நான் உனக்கு தண்டனை தரமாட்டேன் விசுவாசத்திற்கு காண்பிக்க வேண்டிய கீழ்படிதலை கர்த்தர் அவளுக்கு ஞாபகப்படுத்துக்கிறார். நீ போ இனி பாவஞ் செய்யாதே நம் கர்த்தர் இருதயங்களை படிக்கக்கூடியவர், ஆராயக்கூடியவர் மற்றும் அவளுடைய பச்சதாபத்தை அவர் அறிந்திருந்தார் என்று நமக்குத் தெரியாது அல்லவா ஒருவருடைய இருதய தனி நபர் பாவங்களை நாம் தெரிந்துக் கொள்வது இல்லையாயினும் சொல்லப்பட்ட சுவிஷேசத்தின்மேல் கண்டிப்பாக நாம் அவர்களுடைய மனதிற்குள் போக வேண்டியிருக்கிறது.

ஒரு தீர்ப்பாகட்டும் அல்லது ஒரு விபத்து, உபத்திரவம் அல்லது வேறொன்றாகட்டும் ஒரு தனிப்பட்ட நபருடைய ஜீவியத்தில் வந்தபோது அவன் செய்கிற வேலைகளுக்கு எவ்வளவு காற்றை ஏற்படுத்தக் கூடியதோ வேறு ஆலோசிக்கிற கேள்வியே இல்லை. கொஞ்ச வருஷங்களுக்கு கீழ் அமெரிக்க தேசத்திலே சௌத்டகாட்டோ மாவட்டத்தில் இராய்பிட் சிட்டி என்ற பட்டணத்தில் ஒரு பெரிய வெள்ளம் வந்தது. ஆனால் அந்த வெள்ளம் வந்தப் பிறகு அந்தப் பட்டணம் முழுவதும் சபைகளிலே ஆஜர் மிகப் பெரிய அளவில் உயர்ந்ததாக கவனிக்கப்பட்டது. அந்தப் பட்டண வாசிகள் பாவம் ஜீவியம் முழுவதும் இந்த வெள்ளம் மூலம் வைக்கப்பட்டது. வெள்ளத்தின்மூலம் எவ்வளவோ ஜனங்கள் மரித்துப் போவதின்மூலம் மற்றும் ஆஸ்திகள் நாசளமாக்கப்பட்டதின் மூலம் ஜனங்கள் தம்முடைய ஜீவியத்திலே ஒரு மாற்றத்தை வேண்டிக் கொண்டதினால் சபையிலே ஆஜர் உயர்ந்தது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் அவ்விசுவாசிகளை சந்திக்கின்றபோது இப்படிப்பட்டவைகளிலிருந்து தப்பித்துக் கொள்வது என்பது சரியாக அவர்களுடைய அப்பாவித் தனத்தாலேயல்லாமல், அல்லது அவர்களுடைய நல்ல கிரியைகளினாலேயல்லாமல், அல்லது அவர்களுடைய புண்ணியத்தின்மூலம் என்று

அவர்களை நினைக்கக்கூடாது. (அவர்கள் அவ்விசுவாசிகள் என்று நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது).

இங்கே அந்த ஸ்தீரி விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அவள் தன்னுடைய தப்பை தானே கிரகித்தது. ஆகவே அந்த தனிப்பட்ட நபரை தகுதியில்லாத தனத்தினை அடையாளம் கண்டுக் கொள்கிறவிதமாக செய்ய வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்காககூட கர்த்தர் காட்டுகின்ற இரக்கத்தின் பக்கம் அவர்களை திருப்ப வேண்டியிருக்கிறது. அந்த ஸ்தீரி தப்பு செய்தாலும் தீர்ப்பிலிருந்து விடுதலையை பெற்றுக் கொண்டாள். அது எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பமாயிருந்தாலும் கர்த்தர் தகுதியில்லாதவர்கள் மேல் பாவிகளின்மேல் காட்டுகின்ற அபாரமான மற்றும் விலையில்லாத அன்பை, உபகாரத்தை பிரகடனப்படுத்துவது என்ற தாகத்தை நாமும்கூட உடையவர்களாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இருக்கிற இந்த பாவியான ஸ்தீரி விஷயத்தில் நியாய சாஸ்திரம் தன்னுடைய வேலையைக் கச்சிதமாகச் செய்தது. ஆகவே, நாம் நியாயப் பிரமானத்தைக் குறித்து குறைந்த அளவில் பேசுவது நல்லது. 12-வது வசனத்தில் சொல்லப்பட்ட விஷயத்தை சொன்னால் நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்ற கர்த்தர் சொன்ன இந்த விஷயத்தை நாமும்கூட சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்தப் பாகத்தில் இரண்டாவதாக, தீர்ப்பு விஷயத்தில் ஏங்குகிறது மாத்திரம் அல்ல. அன்பு விஷயத்திற்காக ஏங்குகிறவரை இப்பொழுது நாம் கவனித்தோம். சிறையிலிருந்து தப்பிக்கப்பட்ட கைதிகள் விஷயத்தில் தன்மீது வர வேண்டிய தீர்ப்பிலிருந்து சிறைச்சாலை அதிகாரி தப்பித்துக் கொண்டான் என்று நாம் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் இங்கே முக்யமான விஷயம் என்னவென்றால், மீதியான வேறு கைதிகள்கூட கவனிக்கிற முறையில் பவுல் மற்றும் சீலா இன்னும் சிறைச் சாலையிலேயே இருந்தார்கள். ஆனால் காயத்தின் காரணமாக பவுல் சக்தி இழந்தவனாய் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் போனான் என்பது உண்மை ஆகாது. அதே விதமாக ஒரு வேளைதான் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொண்டு போயிருந்தால் பட்டண அதிகாரினிடத்தில் அவனுக்காகட்டும் அல்லது தன்னுடைய காரணத்தினால் கிறிஸ்துவுக்கு அவமானமாகட்டும் அல்லது

தூஷிக்கப்படுவதாகட்டும், நடக்கும் என்று பவுல் நினைக்கவில்லை. பிறகு எதற்காக சிறைச்சாலையிலிருந்து போய்விடவில்லை சாதாரணமாக பவுலுடைய மனதில் சிறைச்சாலை இல்லை சாதாரணமாக பவுலுடைய மனதில் சிறைச்சாலை அதிகாரி மாத்திரம் இருந்தான். தப்பித்துக் கொண்ட கைதிகள் நிமித்தமாக அவன் மரண ஆக்கினைக்கு பாத்திரவானாகக் கூடாது என்று பவுல் கச்சிதமாக பாவித்து அவன் தப்பித்துக் கொள்ளவில்லை.

ஆனால் சிறைச்சாலைத் தலைவன் கண் விழித்துப் பார்த்தபோது கதவுகள் எல்லாம் திறவுண்டு இருப்பதைப் பார்த்து சிறைச் சாலையிலிருந்த கைதிகள் எல்லாரும் தப்பித்துப் போய் விட்டார்கள் என்று நினைத்து, கத்தியை எடுத்து தனக்குத் தானே உருவக் குத்திக் கொண்டு சாகப் போனான். அப்பொழுது பவுல் மிகுந்த சத்தமிட்டு நீ உனக்கு கெடுதி ஒன்றுஞ் செய்துக் கொள்ளாதே என்று சொன்னான். அப். 16:27-28. அந்தச் சிறைச்சாலை அதிகாரி பவுலுக்கு எவ்வளவோ கெடுதி, துன்பம், அபசாரம் செய்து இருக்கிறான். அவன் பவுலை சிறிதுகூட எம்மாத்திரம் பொருட்படுத்தவில்லை. ஆனால் இப்பொழுது பவுல் அவனைக் குறித்து மிகப் பெரிய அளவில் பொருட்படுத்துகின்றான். கெடுதி செய்தவனுக்கு பவுல் இப்பொழுது உபகாரம் செய்கின்றான். உங்களை துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். தீமைக்குப்பதில் தீமைச் செய்யாதிருங்கள்... உங்கள் விரோதி பசியாயிருந்தால் அவனுக்கு போஜனம் கொடு, தாகமாயிருந்தால் அவனுக்கு பானம் கொடு, அப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய், நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினால் வெல்லு. ரோம. 12:14-41. இந்த விஷயங்களை நாம் கர்த்தருடைய மலைப் பிரசங்கத்தில் கவனிக்கலாம். இதே விதமாக பேதுருகூட தன்னுடைய நிரூபத்தில் நமக்கு ஞாபகப்படுத்துகிறார். 1 பேதுரு 3:9. இதுவே சாதாரணமான மற்றும் பரிசுத்தமான சுவிஷேசம். இந்த மோசமான கெட்ட பிரபஞ்சம் அர்த்தம் செய்துக் கொள்ள முடியாத அன்பு இது. யாருக்கு இந்த அன்பு அர்த்தம் ஆகிறதோ அவன் கண்டிப்பாக பயத்தோடு நடுங்க வேண்டியிருக்கிறது ஏனென்றால், துஷ்டத் தனத்தில், தீமையில் நிறைந்த விலையில்லாத ஜீவியத்திற்கு அந்த அன்பு எவ்வளவோ உன்னதமானது.

இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று அந்தச் சிறைச்சாலைத் தலைவன் கேட்கின்றான். அப்பொழுது பவுல் சுவிஷேசத்தினுடைய

கட்டளையைக் குறித்துப் பேசினான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். அந்த இராத்திரியில் அந்த சிறைச்சாலை அதிகாரி வீட்டிற்கு போனதின்மூலம் மற்றும் அவனுடைய குடும்பம் முழுவதிற்கும் ஞானஸ்நானம் கொடுத்ததின்மூலம் பவுல் மற்றும் சீலாவினுடைய சுவிஷேச அன்பு கிரியை ரூபத்தில் வடிவமைந்தது. அவ்விசுவாசிகளை சந்திக்கின்ற இப்படிப்பட்ட முறைக்காகவே நாம் தவிக்க வேண்டியிருக்கிறது, தவமிருக்க வேண்டியிருக்கிறது. கவனிக்கவும். அந்தச் சிறைச்சாலை அதிகாரியின் ஆத்மீக மரணத்திலிருந்து தூக்கத்தைவிட்டு எழச் செய்த அந்த அக்கரையான காரியமே சுவிஷேசத்தின் அன்பு காரியமாயிருக்கிறது. இதனை குறைவாக வர்ணிக்க முடியாது மற்றும் இதனை விவரிப்பதற்கு வார்த்தைகள் போதாது. நம் வார்த்தையில் ஒவ்வொரு முறையும் நம் கைகள் மிகவும் எளிமையாக ஒன்று சேராது.

எந்த ஒருவருக்கும் தகுதியில்லாமற் போனாலும் தன்னை தண்டித்தவரை மற்றும் தன்னோடு இருக்கிற குற்றவாளியை சிலுவையிலிருந்து மன்னித்த இரட்சகரான இயேசுவின் அன்பே நம்முடைய ஆத்துமாக்கள்கூட எல்லா இடங்களிலும் அறிவிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. அப்படிப்பட்ட இயேசுவினுடைய மன்னிப்பையே நாமும்கூட அறிவிக்க வேண்டியிருக்கிறது.

## விருப்பம் இல்லாதவர்களுக்கு அறிவிப்பது : யோ. 4:7-39

நாம் முக்கியமாக தியானிக்கிற சுவிஷேச சாட்சிகளிலே சமாரிய ஸ்தீரியின் பாகம் ஒன்று. ஏனென்றால், அந்த ஸ்தீரி நம்முடைய கர்த்தரிடத்தில் செய்த சம்பாஷனை மிகவும் விரிவாக வேதாகமப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எம்மாத்திரமும் அலட்சியமில்லாமல் உடனே கண்டிப்பாக கிடைத்த பயன்களை வைத்து இந்த சுவிஷேச பாகம் சகஜமாகவே எல்லாருக்கும் எவ்வளவோ வசீகரமுடையதாயிருக்கிறது. இங்கே சுவிஷேசம் மற்றும் நியாய சாஸ்திரம் ஒன்றோடு ஒன்று கலந்ததாயிருக்கிறது. இங்கே கர்த்தர் சுவிஷேச வலையை விரித்து தம்முடைய பரலோக இராஜ்ஜியத்தில் அவர்களை சேர்ப்பதற்கு அவகாசத்தை எடுத்துக் கொள்கிறார். இந்த மொத்த வேதாகமப் பகுதியில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது அவளுக்கு இந்த சுவிஷேச விஷயத்தில் எவ்வளவும் இஷ்டம் இல்லையென்பதே. இயேசுவைப் பார்ப்பதற்காக அல்லது அவரைக் குறித்து நன்றாய் விசாரித்து அறிந்து

கொள்வதற்காகட்டும் அவள் அந்த கிணத்தினடிக்கு வரவில்லை. ஆனால் கர்த்தரே அவளுக்காக கிணற்றினடிக்கு வந்தார். தாகத்திற்காக தண்ணீர் கேட்பதின்மூலம் விஷயம் ஆரம்பமானது. சரீ சம்மந்தமான மற்றும் இந்த உலக சம்மந்தமான விஷயங்களோடு ஆரம்பித்து ஆத்துமா சம்மந்தமான விஷயத்திற்குள்ளாக கர்த்தர் தன்னுடைய சம்பாஷனையை நடப்பித்து இருந்தார். இதன்மூலம் கர்த்தரிடத்திலிருந்து நாம் எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்விதமான முறையில் செய்வதற்கு நாம் எத்தனை முறை முயற்சி செய்தோம்? எப்படியென்றால் சரீர விஷயங்களில் இருந்து ஆத்துமா விஷயத்திற்குள்ளாக நம்முடைய சம்பாஷணையை நாம் எப்படி மாற்ற வேண்டுமோ முயற்சி செய்திருக்கிறோமா?

முதலாவது கர்த்தர் தண்ணீருக்காக செய்த விண்ணப்பம் அந்த ஸ்தீரியினுடைய மனதை வசீகரித்தது. அவள் சாதாரணமாக ஒரு ஏழை ஸ்தீரி மாத்திரமே மட்டும் அல்லாமல் சமாரிய ஜாதியைச் சேர்ந்த ஸ்தீரியாயிருந்தாலும் கர்த்தர் அவளோடு பேசினார். அவள் நிராகரிக்கப்பட்ட, சமூகத்தில் ஒதுக்கி தள்ளப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவள் என்று கர்த்தர் வர்ணிக்கவில்லை. எல்லாரும் கூட தேவனுக்கு எவ்வளவோ விலையேறப்பட்டவர்கள். மனந்திரும்பின ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் எவ்வளவோ சந்தோஷம் காணப்படுகிறது. ஒருவரும் தப்பிப் போகாமல் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். கர்த்தர் அவளுக்கு செய்த சுவிஷேச ஊழியம் இந்த உத்தேசமே என்று வெளிப்படுத்துகிறது. நம் சுவிஷேச ஊழியத்தில் நாம் எப்படி இருக்கிறோம்? நீ உட்காருவதற்கு முன்பு நான் சொல்லுகிறதை எல்லாம் கேள் என்ற கட்டளையிடுகிற தோரணையில் இருக்கிறோமா? மிகவும் ஜாக்கிரதையாக அல்லது சிரத்தையுடன் இருக்கின்றோமா?

இங்கே இயேசு தன்னுடைய சம்பாஷணையை பூமிக்குரிய தண்ணீரிலிருந்து ஜீவத் தண்ணீர் பக்கம் மாற்றிக் கொண்டிருந்தார். நம்முடைய அன்றாட கால நேரங்களில் ஆத்துமாவைக் காட்டுகின்ற இப்படிப்பட்ட உதாரணங்களை அநேகமிருக்கும். எப்பொழுதும் கர்த்தர் உபயோகிக்கிற இப்படிப்பட்ட சகஜமான உதாரணங்கள் பரிசுத்த வேதாகமத்தில் நம் எல்லோருக்கும் நன்றாக தெரிந்தவைகள் ஏராளமானவைகள் எழுதப்பட்டிருக்கிறது. நிலத்தில் பூத்துக் கிடக்கிற பூக்கள், வானத்தில் காற்றில் சிறகடிக்கும் வண்ணப் பறவைகள், முதலானவைகள், தேவன் மனுஷனை

ஆதரிக்கிற முறைக்கு உதாரணங்கள். இந்த உலக மேய்ப்பனுடைய அன்பு கலந்த ஊழியம் பரலோக மேய்ப்பனுடைய மிக உன்னதமான முடிவில்லாத பாதுகாப்பு. ரொட்டி, கதவு, மீன்கள் பிடித்தல் முதலானவைகள் அநேக இந்த உலக விஷயங்களை கர்த்தர் மூலம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் நாம் இவ் உலக விஷயங்களை விநியோகித்து பரலோக விஷயங்களாக அவற்றை மாற்றுவதற்கு எதற்கு கஷ்டப்படுகிறோம். காரணம் என்னவென்றால், நம்முடைய நினைவுகள் ஆழமாக ஆத்மீக விஷயங்களின்மேல் ஒருமுகப்படுத்தப்படாமல் போவதினாலேதான். அதன் விளைவாக, நாம் சரியான சந்தர்ப்பங்களை மற்றும் நிகழ்ச்சிகளை பார்க்கக்கூடாமற் போகிறது.

அந்த சமரியா ஸ்தீரியை கர்த்தர் சந்தித்த முறையில் இங்கே மிக முக்யமான பாகம் என்னவென்றால், நியாயப் பிரமானத்தை போதிப்பதின்மூலம் பாவத்தை வெளிப்படுத்துவது எனக்குப் புருஷன் இல்லையென்று நீர் சொன்னது சரிதான்.

எப்படியெனில் ஐந்து புருஷர்கள் உனக்கிருந்தார்கள். இப்பொழுது உனக்கு இருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல இதை உள்ளபடிச் சொன்னாள் என்றார். இதைக் கேட்டதற்கு பாவ சுபாவமுடைய சரீரம் எவ்வளவோ சகித்துக் கொள்ளாது. இது லேசாக அவளை திடீரென்று மாற்றக்கூடியது. ஒருவன் தப்பு செய்கிறான். அவனை நம் பக்கமாக திருப்பிக் கொள்வதற்கு இப்படிப்பட்ட அவகாசங்கள் நமக்கு எவ்வளவோ வந்திருக்கக்கூடும். ஆனால் இது தீர்ப்பு தீர்க்கிறது என்று அவன் நினைக்கிறபோது நாம் பின்னால் தள்ளிப் போகிறோம். ஆனால் நாம் அவர்கள்மீது அன்புடனே அவர்களுக்குள் மறைந்து கிடக்கிற பாவங்களை கண்டித்து அந்தப் பாவத்தை அங்கீகரிக்க முடியாது என்று தெரியப்படுத்துகிறோம். நாம் எவ்வளவு பாவிகளோ நமக்குத் தெரியும். ஆகவே ஒருவர்மீது ஒருவர் தயவாயிருந்து, அவசரமானால் நியாயப் பிரமாணத்தின்மூலமாயினும் சரி. அந்தப் பாவத்தை கண்டிப்பதற்கு தயங்கக்கூடாது. இந்த சந்தர்ப்பத்தில் மிக முக்யமான விஷயம் என்னவென்றால் இயேசு அவளோடு தனியாக பேசுகிறார்.

மத சம்மந்தமான ஞானம் அவளுக்கு எவ்வளவு இருக்கிறதோ என்று கர்த்தருக்கு தெரியப்படுத்தப்பட்ட பிறகு அவளுக்கு தெரிவிக்கப்பட்ட அந்த ஞானத்தை கர்த்தர் சரி செய்து அவற்றை வளர்ப்பதற்கு முயற்சி செய்கிறார். தயவு மற்றும்

இரக்கமுடைய ஆவியுடனே நாமும்கூட அதே விதத்தில் முயற்சி செய்ய வேண்டும். பிறகு இயேசு அவளோடு கடைசி காலத்தில் நடக்கப்போகிற விஷயங்களைக் குறித்து பேசுகிறார். மக்களுக்கு நாம் கடைசி நாட்களில் என்ன நடக்குமோ என்பதை தெரியப்படுத்துவதற்கு விருப்பப்படுகிறோம். ஏனென்றால், மக்கள் அவர்களுடைய சிறிய சிறிய ஜீவியத்தில் அநேக பிரச்சினைகளின்மூலம் கட்டப்பட்டு, சூழப்பட்டு முன் பார்வையோடு அளவெடுக்கிறார்கள். கர்த்தர் மாதிரியே நாமும்கூட சம்பாஷனையை நித்திய ஜீவனிலிருந்து நித்திய மரணத்தின் பக்கம் நகர்த்துவோம். கர்த்தர் எதிர் பார்க்கிற முடிவைப் போலவே உன்னோடு பேசுகிற நானே அந்த மேசய்யா என்ற சுவிஷேசத்திற்கு அவள் தன் அக்கறையைக் காட்டினாள்.

அவர் பரலோக தேவன் ஆகவே அவளை சரி செய்து கோட்டை தாண்டச் செய்து தன்னுடைய வார்த்தை ஜாலத்தால், நயத்தால் பிடித்துக் கொண்டார். நாம் கூட இப்படிப்பட்ட நிபுணத்துவத்துடன் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக தியானி தியானி தியானி. அப்பொழுது வார்த்தையை சரியாக உச்சரிப்பதற்கு, உபயோகப்படுத்துவதற்கு ஞானத்தை பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுப்பார்.

## <u>மூன்றாவது பாகஸ்தம் : அப் 13:5-12.</u>

ஆவிக்குரிய கயிறு யுத்தம் என்று இதைச் சொல்லலாம். கயிறுக்கு ஒரு பக்கம் பவுல், மற்றொரு பக்கம் எலிமா, நடுவில் செர்கியு பவுல். இது இருவர் மத்தியில் நடந்த தீவிரமான வாதத்தோடு கூடினது. ஆனால் சுவிஷேச சாட்சிக் குறித்த இந்த தீவிரமான வாதம் செர்கியு பவுலுடனேயல்ல எதிரியான எலிமாவுடனே. பவுலினிடத்தில் தேவனுடைய வசனத்தைக் கேட்டு எவ்வளவோ ஆசையோடு, சிரத்தையோடு இருந்த செர்கியு பவுலுக்கு தடையுண்டு பண்ணுகிற எலிமாவை பவுல் பக்தன் நியாயப் பிரமாணத்தோடு தீவிரமாக கண்டிக்கிறான். இது நமக்கு லூத்தர் என்ற பக்தன் லைப் ஜிக் என்ற பிரதேசத்தில் தன்னை எதிர்க்கிறவர்களோடு நடத்தின தீவிரமான வாதத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. இந்த வாதத்தில் லூத்தர் தன்னுடைய எதிர்ப்பாளர்களை வாதத் திறமையினால் ஜெயிப்பதைக் காட்டிலும், அந்த வாதத்தில் சாட்சியாக கலந்து கொண்டவர்களை தன்னுடைய வாதத்தில் பிரதி பாவம் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார். செர்கியு பவுல் விவேகமுடையவன்.

ஆகவே அவன் உண்மையாக பவுல் மற்றும் பர்ணபால் இவர்களுடைய வார்த்தையின்மீது எவ்வளவோ அக்கரைக் காட்டினார். ஆனால் எலிமா அந்த அதிபதியை விசுவாசித்திலிருந்து தூரமாக்குவதற்கு முயற்சி செய்தான். இந்நாட்களில் இந்த விதமாக நடந்தால் பவுல் உபயோகப்படுத்தியதுப் போல நாமும் அப்போஸ்தலருடைய சக்தியை உபயோகிக்க முடியாமல் போகலாம். ஆனால் இப்படிப்பட்ட நவீன எலிமாக்களை தள்ளி விடுவதற்கு மற்றும் கண்டிப்பதற்கு நியாயப் பிரமாணம் நமக்கிருக்கிறது. ஒவ்வொரு முறையும் நமக்கு மூன்று பேர் மற்றும் அதற்கும் அதிகமாக இருக்கிற குழுக்கள் நமக்கு எதிர்ப்படலாம். அவற்றில் தேவனிடத்தில் அக்கரையுடையவர்கள், யாராவது இருந்து மற்றவர்கள் மூலம் அவர்களுடைய விசுவாசம் தடைப் போடப்படுகிறபோது அப்படிப்பட்ட எதிர்ப்பானவர்கள் பக்கம் நாம் திரும்பி அவர்களுடைய விமர்சனத்தை தேவனுடைய வார்த்தையின் மூலம் சரிச் செய்ய வேண்டும்.

நான் கலிபோர்னியா கல்லூரியில் இருந்தபோது இதே விதமாக தேவனிடத்தில் அக்கரை, ஆர்வம் உடைய ஒருவரோடு நான் பேசிக் கொண்டிருக்கையில் இதை தடங்கல் செய்தபோது, அவருடைய வாதம் தப்பு என்று நான் வார்த்தையின்மூலம் எச்சரித்தேன். அதேவிதமாக மற்றும் ஒரு முறை நான் ஒரு ஜோடிக்கு வார்த்தையைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது, யெகேவா சாட்சிகள் குழுவிலிருந்து இரண்டு பேர் வந்து என்னை தடங்கல் செய்து தடையுண்டாக்கினர், நான் அவர்களை தீவிரமாக வார்த்தையின்மூலம் கண்டித்தேன். இந்த நிகழ்ச்சிகளின் மூலம் அந்த ஜோடி தேவனுடைய வார்த்தையைக் கேட்டு விசுவாசித்தார்கள். இந்த பாகத்திலே இருக்கிற சௌந்தர்யம் என்னவென்றால், எலிமாவை பவுல் வார்த்தையின்மூலம் கண்டித்ததின்மூலம் செர்கியு பவுல் என்ற அதிபதி வார்த்தையை விசுவாசித்தான். ஆகவேதான் அந்த அதிபதி நடந்தவைகளைப் பார்த்து கர்த்தருடைய உபதேசத்திற்கு, போதனைக்கு ஆச்சர்யப்பட்டு விசுவாசித்தான் என்று எழுதப்பட்டது. பவுல் தன்னுடைய சுவிஷேச போதனையில் எலிமாவினுடைய மாய வித்தையை நீக்கிப் போட்ட பின்னால் செர்கியு பவுலை, தன்னுடைய சுவிஷேசத்தின் மூலமாய் ஜெயித்துக் கொண்டார்.

## கடினத்தன்மையை வெளிப்படுத்துபவர்கள் : லூக் 11:45-52.

இந்த உலக நிலைமையை நாம் பரிசீலித்து சுவிஷேசத்தின்மூலம் எதிர் கொள்வதற்கு செர்கியு பவுல் போன்றவர்கள் தேவனுடைய வார்த்தையை கேட்பதற்கு தேடுகிறவர்கள், எல்லா இடங்களிலும் நமக்கு கிடைக்க மாட்டார்கள். ஏரோது பாவத்தை குறித்து ஞானஸ்நானம் கொடுக்கிற யோவான் எச்சரித்தபோது ஏரோது யோவானை என்ன செய்தானோ நமக்குத் தெரியும். ஆனாலும் சரி. நாம் அவ்விதமாக பாவத்தை எச்சரிப்பது தப்பாது. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக் கொள். ஒரு வேளை உன் இருயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படும். அப். 8:22 என்று பேதுரு மாய வித்தைக்காரன் சீமோனை எச்சரித்த வண்ணம் நம்முடைய நோக்கம்கூட அதே மாதிரியிருக்க வேண்டும்.

லூக்கா 11வது அதிகாரத்தில் நாம் கவனிப்பது என்னவென்றால் மாற்கு சுவிஷேசத்தில் 12வது அதிகாரத்தில் இருக்கிற தனிப்பட்ட நபருடைய உத்தேசத்தைப் போலவே லூக் 11வது அதிகாரத்தில் இருக்கிற நபருடைய உத்தேசத்தைப் போல் இல்லை. கடினமானவர்கள், பிடிவாத குணமுடையவர்கள் நம்முடைய சுவிஷேச வார்த்தைகளை ஜீரணிக்க முடியாமல், தாங்கிக் கொள்ள முடியாமல் மறுபடியும் மறுபடியும் அதே வேளையாக வாக்குவாதம் செய்வார்கள். தங்களுடைய நீதியின் சூத்திரங்களை அந்த நியாய சாஸ்திரி காப்பாற்றக்கூடும். ஆனால் அவர்களுடைய வேஷாந்நிரம் காப்பாற்றுமா? ஆனால் மனுஷனுடைய இருதயத்தை படிக்க கூடியவரான இயேசு கிறிஸ்து அவன் அப்பாவியல்ல தெரிந்துக் கொள்ளக்கூடும். கர்த்தருக்கு இருக்கிற அப்படிப்பட்ட சக்தி சமார்த்தியம் நமக்கு இல்லை. ஆகவே அந்த நபர் பேசுகின்ற வார்த்தைகளைப் பற்றி மற்றும் செய்கையை பற்றி நாம் தீர்ப்புச் சொல்ல வேண்டியிருக்கிறது. வேண்டுமென்றே பிடிவாதமாக இருப்பவர்கள் மீது கர்த்தர் இங்கே உபயோகப்படுத்தினவிதமாக

நாமும் கூட நியாயப் பிரமானத்தை உபயோகித்து பேச வேண்டும். ஒரு முறை வைஸ்கேன் என்ற லூத்தரன் மிஷனரி குதிரையின்மீது பிரயானம் செய்து கொண்டிருக்கையில் வழியிலே தன்னுடைய சக பிரயாணிக்கு இதே விதமாக சுவிஷேசத்தை பிரசங்கித்து இருக்கிறார். ஆனால் அந்த பிரயாணி மிகவும் கடினமாயிருந்து ஒவ்வொன்றிற்கும்கூட எதிராகப் பேசி விமர்சித்து இருக்கிறபோது

அந்த மிஷனரி மிகவும் கோபமாக ஆகவே நீ நரகத்திற்குப் போ என்று சத்தமாக எச்சரித்து சொன்னபோது வைஸ்கன்னுடைய கடினமான வார்த்தையின் பயனாக அந்த பிரயாணி பச்சதாபப்பட்டு சுவிஷேசத்தை ஏற்றுக் கொண்டான்.

அதுவே நமக்கு அடையாளமாயிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கர்த்தருடைய பேச்சு அந்த நியாயப் பிரமாண உபதேசியரை விழச் செய்து சுவற்றினை குத்தியது. அதற்கு அவர் நியாய சாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயா, சுமக்க அரிதான சுமைகளை மனுஷர்மேல் சுமத்துகிறீர்கள் நீங்களோ உங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்தச் சுமைகளை தொடவும் மாட்டீர்கள். ஒரு மனுஷனுடைய பாவத்தை அவனுக்கு விவரமாக தெரிவிப்பதற்கு எவ்வளவு சமயம் நமக்கு தேவைப்படுகிறதோ தெரியக்கூடிய அவகாசம் நமக்கு இல்லை. சரியாகாத மற்றும் இரண்டு இரகமான அவர்களுடைய சந்ததி அசுத்தங்களை கர்த்தர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார்.

ஆபேலின் இரத்தம் முதல் பலிப் பீடத்துக்கும், தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்ட சகரியாவின் இரத்தம் வரைக்கும் உலகத் தோற்ற முதற்கொண்டு சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தப் பழியும்...

வேதாகமத்தில் தனக்கிருந்த பரிபூர்ணமான அநுபந்தத்தின்மூலம் கர்த்தர் இங்கே பேசினார். இதேவிதமாக சந்தர்ப்பங்களை பற்றி சரியான வசனங்களை உபயோகித்து பேசுவதற்கு கர்த்தர் மாதிரியே அவ்வளவு முழுமைப் பெற்றவர்களாய் நாம் இல்லை.

இந்த வர்த்தமானங்களின் கடைசியில் கர்த்தர், மற்றவர்களினியே குறுக்கிட்டு இருக்கிற அவனுடைய கடனை அவன் மேல் சுமத்துகிறார். எந்த ஒரு மனுஷனும்கூட தனியாக ஜீவிப்பன் அல்ல. ஒவ்வொருவரும் மற்றவர்களை ஏதோ ஒரு முறையில் பரிச்சியம் உடையவர்கள், பிரபல்யம் செய்யக்கூடும். அதே விதமாக இங்கே கௌரவமான நியாய சாஸ்திரியும் கூட மற்றவர்களை வழி முறைகளில் போதனை செய்கின்றான். நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை. உட் பிரவேசிக்கிறவர்களையும் தடை பண்ணுகிறீர்கள் மற்றவர்களை விமர்சிக்க கூடிய பிரதிபாவம் செய்யக்கூடிய தம்முடைய சாமார்த்தியத்தை குறித்து அவர்கள் கர்வத்தோடு இருக்கிறபோது அவர்களை சுவிஷேசத்தின்மூலம் சந்திக்கின்ற இந்த சந்தர்ப்பத்திற்கு தகுந்தபடி இருக்கிற நிலைமையை நாம் கவனித்து அந்த அவகாசத்தை நாம் சரியாக உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றைக் காட்டிலும், மிக முக்யமாக நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், சுவிஷேசத்தைக் கேட்பதற்கு கடினத்துவத்தை காட்டுகிறவர்களுக்கு நாம் நியாய பிரமாணம் மூலம் மாத்திரமே அவர்களைச் சந்தித்து பேச வேண்டியிருக்கிறது. ஏனென்றால், கிருபையினுடன் கூடிய சுவிஷேசத்தின் விஷயத்தினை அங்கீகரிப்பதற்கு அவர்கள் இஷ்டப்பட மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நம்முடைய சுவிஷேச சாட்சி பன்றிகள் முன் போடப்பட்ட முத்துக்களைப் போலிருக்கும். அவர்களுக்கு சுவிஷேசத்தின் மதிப்பு தெரியாததினால் அவற்றை தள்ளிவிட்டு, அவற்றை அனாவசியமாக விமர்சித்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு நியாயப் பிரமாணம் சரியான வழி.

## எல்லாம் தீமையான இடங்களில் பார்ப்பது : மத். 19:16-24

சாஸ்திரங்களின்மூலம், அவர்களுடைய சொந்த அபிப்பிராயங்களின்மூலமும் மற்றும் ஊகங்களின்மூலமும் ஜீவியத்தின் பிரச்சனைகளுக்கு சமாதானங்களை தேடுகின்றவர்கள் நமக்கு நித்திய ஜீவியத்தில் அவ்வப்பொழுது தட்டுப்பட்டுக் கொண்டு காணப்படுகிறவர்களாயிருப்பார்கள். இந்த முறையில் மனுஷனுடைய மேதாவித்தனத்தால் உற்பத்தியாகக் கூடிய அநேக ஆலோசனைகள் தங்களுக்கு அனுகூலமாக மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதே உண்மை.

இவ்விதமாக தங்களுக்கு தாங்களே பரிசுத்தர்களாக, சரியானவர்களாக, நியாயவான்களாக, நிர்ணயித்துக் கொள்கிறவர்கள், கர்த்தருடைய நாட்களிலே மாத்திரம் அல்ல, இந்நாட்களில்கூட தாங்கள் செய்கின்ற நல்ல வேலைகளின்மூலம் தேவனை தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாழ்க்கைக்குப் பின்னால் உண்டாகக் கூடிய பரிசுக்காக அவர்கள் கர்த்தர் கொடுத்த பத்துக் கட்டளைகளை இவ்வாறு உபயோகப்படுத்துகின்றனர்.

மேலே சொல்லப்பட்ட வாக்கியத்தின் பகுதியில் மிகுந்த ஆஸ்தியை உடைய ஒரு வாலிபன் இதே விதமான பாவனையில் கர்த்தரை சமீபித்து இருந்தான். நல்லப் போதகரே, நித்ய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான்?

இது நமக்கு மாத்திரம் மிகவும் கவலைக்குரிய விஷயம். ஆனால் புகழ், பெருமை பிரதிஷ்டையுடைய அநேகம் பேரின் புகழ்ச்சி இதுவே. போவது என்பது கர்த்தருடைய காலத்திலே இருந்த யூதர்களுக்கு மாமுலே. இந்நாட்களில் காணப்படுகின்ற மிகப் பெரிய அந்நிய கிறிஸ்துவ சபைகளுக்கு இந்த சொந்த காரியங்களே மதம். இது பெரிய அஸ்திபாரமாக இருந்தது. இந்நாட்களில் நம் மத்தியில் இருக்கிற அநேக கிறிஸ்தவ பிரிவுகளில் கூட சமுத்திர தீரத்தில் இவ்விதமான காரியம் இருக்கிறது.

இங்கே இருக்கிற வாலிபனோடு கர்த்தர் மிகவும் சாதாரணமாக பேசுகின்றவனாயிருக்கிறார். இங்கே அந்த வாலிபன் கிறிஸ்துவுக்கு பரீட்சை வைக்க வேண்டும் என்று எண்ணத்தில் இல்லையாயினும், தன்னுடைய கேள்விக்கு சமாதானம் கிறிஸ்துவினிடத்திலிருந்து வரவழைக்க வேண்டும் என்று மாத்திரமே பார்க்கின்றான். கட்டளைகளை கைகொள்ளச் சொல்லி கர்த்தர் அந்த வாலிப அதிகாரிக்கு ஆலோசனை சொல்ல அவன் அவை எல்லாவற்றையும் அனுசரிக்கின்றேன் என்று பதில் சொன்னான். அவன் அவைகளை அனுசரிக்க வில்லையென்று எச்சரிக்கவில்லையாயினும், நித்திய ஜீவனென்பது அவனுக்கு அசல் உண்மையாக வேண்டுமா? வேண்டாமா என்ற விஷயத்திற்கு கர்த்தர் வருகின்றார். அதற்கு இயேசு நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்கு கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார் என்று அவனுக்குச் சொன்னார். கவனித்தீர்களா எங்கே பொக்கிஷம் இருக்கிறதோ அங்கேயே உன் இருதயமும் கூட இருக்கும். ஆனால் அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுடையவனாயிருந்தபடியால் அந்த வார்த்தையைக் கேட்டு விசனத்தோடு போய் விட்டான். இந்நாட்களில் சமூகத்தில் இருக்கிற இது நமக்கு ஆசீர்வாதமாயில்லாமல் சாபத்திற்கும் காரணமாயிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் கர்த்தருடைய வேளைக்கு அதிகதிகமாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்நாட்களில் நம் சமூகத்திலே நமக்கு இருக்கிற இந்த சமூக சாங்கேத நிபுணத்துவம்கூட கர்த்தருடைய உத்தேசத்திற்காக மிகச் சரியாக பயன்படுத்திக் கொள்ளலாம். இந்நாட்களில் அநேகம் பேருக்கு இந்த ஆஸ்தி, செல்வம் என்பது பெரிய முள்ளாக மாறியிருக்கிறது. அந்த எமனாகிய முள்ளுக்களிலே சிக்குண்டு அநேகம் பேர் மூழ்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

பரத்தைக் காட்டிலும் ஆஸ்தி, செல்வமே சர்வமென்று இப்படிப்பட்டவர்களோடு நாம் தேவனுடைய வார்த்தையின்மூலம் பேச வேண்டியதாயிருக்கிறது.

அவ்விதமாக பேசுகின்றபோது ஆஸ்தி-செல்வம்-பரலோகம் இவையிரண்டிற்கும் மத்தியிலேயிருக்கிற வித்தியாசத்தை சரியாக இந்த கீழ்கண்டவிதமாக விவரிக்க வேண்டியிருக்கிறது. கிறிஸ்து நம் ஜீவியத்தை ஆளுகை செய்ய வேண்டுமா அல்லது சாத்தான் பயங்கர பரிமாணங்களோடு நம் வாழ்க்கையை நாசமாக்கி சபிக்க வேண்டுமா? நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா? மேலிருந்து பாவ மன்னிப்பா அல்லது மனுஷர்களினால் புண்ணிய காரியங்களா. கிறிஸ்துவை மற்றும் மற்றவைகளை கூட ஆஸ்தி ஒன்று கலந்து ஷேவிக்கிற ஆலோசனைக்கு அவகாசம் கொடுக்கிற விதமாக எப்பொழுதும் நாம் நம்முடைய வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது. ஒரு வேளை நம்முடைய பிரயாசம் வீணாகிப் போகிறபோது கூட நிராசைப்படக்கூடாது. மாற்றம் என்பது சரியாக தேவனுடைய சக்தியின்மூலம் நடக்கிறதென்று நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமக்கிருக்கிற வார்த்தையின்மூலம், பேச்சின்மூலம் அவர்களுக்கு எது முக்கியமோ அதை தேர்ந்தெடுக்கிற அவகாசத்தைக் கொடுக்க வேண்டும். உடனே நிர்ணயம் எடுக்க முடியாமற் போகலாம். ஆனால் அவனுக்கு ஒரு அவகாசம் கொடுக்க வேண்டும் அல்லவா அவர்களுடைய நிர்ணய அதிகாரத்தை மாற்றுவதற்கு நாம் கொஞ்சம் விஷயத்தை கொடுக்க வேண்டுமேயல்லாமல் அப்பொழுதே கிறிஸ்து அல்லது ஆஸ்தி அல்லது செல்வம் என்று நிர்ணயிக்கக்கூடாது. பணக்காரத்தனமான ஜீவியம் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் அநேகமான எச்சரிக்கைகள் நமக்கு இருக்கிறது. ஆஸ்தியிருக்கிற அல்லது பொக்கிஷம் இருக்கிற இடத்தில் இருதயம் இருக்கக்கூடாதென்று....

ஒட்டமானது ஊசியின் காதிலே நுழைவது ...

சோதனையில் விழுவது .... தூக்கைப் போல் நம்மீது ஒரு நாள் வருவது....

ஒரு அடியோடு நீ எவ்வளவு தூரமும் போக முடியாது நீ நிரந்தரமாய் முன் அடி வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

ஒரு வார்த்தையில் நீ யாரோ ஜனங்களுக்குத் தெரியாதவன், நீ நிரந்தரமாய் தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்க வேண்டும்.

ஒரு அங்குலம் உன்னை எவ்வளவோ உயரமாக உயர்த்தாது நீ நிரந்தரமாக வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். ஒரு அழைப்பு அவ்வளவு செய்யாது நீ நிரந்தரமாக போய் அழைத்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

நான் என்ன நல்ல காரியம் செய்ய வேண்டும்? வாலிபன் கேட்டபொழுது இப்படிப்பட்ட சுயநீதி காரியத்தைக் குறித்த கேள்விக்கு சமாதானத்தை விவரிப்பதற்கு பரிசுத்த வேதாகமத்தில் முக்கிய வாக்யப் பாகமிருக்கிறது. நீங்கள் விசுவாசத்தின்மூலம் கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமைப் பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல எபேசி 2:8-9.

நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம் எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைப் போலிருக்கிறது - ஏசய் 64:6.

நன்மை செய்கிறவள் இல்லை, ஒருவனாகிலும் இல்லை - சங். 14:1-3. நியாயப் பிரமாணத்தின்மூலம் யாரும் இரட்சிப்பை அடையமாட்டார்கள்.... அந்த வாலிபன் தன்னுடைய ஆஸ்தியை ஏழைகளுக்கு கொடுத்து போதகருடைய வார்த்தைக்கு கீழ்படிவதற்கு, அவர் வார்த்தையை அனுசரிப்பதற்கு விருப்பப்படவில்லை. ஆகவே சுயநீதி பரிபூர்ண சற்குணமாயிருப்பது அல்ல என்பதை அவனுக்கு தெரியப்படுத்துவதற்கு இயேசு கிறிஸ்து விரும்பினார்.

## தவறான விசுவாசம் (யோவான் 3:1-21):

மேற்சொன்ன பாகத்திலிருக்கிற வாலிபன் மிகுந்த ஆஸ்தியுடையவன் ஆகவே விசனத்தோடு புறப்பட்டுப் போன பின்பு இனிமேல் அவனுடைய வாழ்க்கையினுடைய கடைசி பலன் என்னவோ நமக்குத் தெளிவாகத் தெரியும். நிகோதேமுகூட முதலில் கர்த்தர் சொன்னதை கேட்டு அவரை அனுசரிக்காமல் சென்றுவிட்டான். ஆனால் பின்னால் கர்த்தருடைய சாமாதி காரியக் கிரமங்களில் அவனுடைய விசுவாசம் எவ்விதமாக அவனில் கிரியைச் செய்ததோ நாம் பார்க்க முடியும். நம்முடைய

சுவிஷேச ஊழியத்தில் முதலாவதாக நாம் நினைத்தபடி பலன்களை சாதிக்க முடியாமற்போனாலும் உற்சாகமிழந்து விடக்கூடாது. ஆனால் நேரம் கடந்தபின் நம்முடைய பார்வைக்கு அகப்படாமல் கர்த்தர் அதன் பலனை கொடுக்கச் செல்வார். இந்த நிக்கோதமு நிகழ்ச்சி நமக்கு நல்ல ஊக்கத்தை, உற்சாகத்தை கொடுக்கிறது.

நிக்கோதோமு யூதர்களுடைய வேஷாத்தாரங்களோடு சுயநிதி காரியங்களோடு வளர்க்கப்பட்டான். இந்தப் பாகத்தில் நிகோதோமு கர்த்தரை பரிபூர்ணமாக அர்த்தம் செய்துக் கொள்கிற முறையில் நமக்கு காணப்படுகிறார். ஆனால் கர்த்தர் அவனுடைய இருதயத்தில் நாட்டிய வார்த்தை விதையைப் போல பின்னாளில் பரிசுத்த ஆவி தேவன் சரியாக நல்ல முறையில் முளைக்கச் செய்து வளரச் செய்தார். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் புதிதாக பிறக்க வேண்டும் என்று சொன்னபோது இது எப்படி சாத்தியமாகும் என்று நிக்கோதோமு கேட்டான். பழைய வாழ்க்கையோடு உள்ள உறவை அறுத்தெரிய வேண்டிய அவசரத்தை அவன் இந்தப் பிறவியில் அடையாளம் கண்டுக் கொள்ளாமற் போனான்.

மோசே வனாந்திரத்திலே உயரே தூக்கி நிறுத்தின வெண்கலச் சர்ப்பம் கிறிஸ்துவினுடைய ஜீவாதார பலிக்கு முன் அடையாளமாக எப்படியிருக்கிறதோ கர்த்தர் இங்கே விவரிக்கிறார். இரட்சகருக்கு சாத்ய சுரூபமாக இருக்கிற அநேக பழைய ஏற்பாட்டு அடையாளங்களில் இது ஒன்று. யூதா மதத்தினுடைய போதகனாகிய நிக்கோதோமுக்கு இந்த அடையாளம் மிகவும் நன்றாக அறிமுகமானதே. அதனாலே அவன் மனதிலே இந்த அடையாளம் மிகவும் தெளிவாக முத்திரையிடப்பட்டது. கிறிஸ்து சொன்ன அல்லது செய்த காரியங்கள் எவ்விதமாக வேதாகம வசனங்களை நிறைவேற்றியதோ புதிய ஏற்பாட்டிலே சரியாக, மிக நன்றாக மறுபடியும் மறுபடியும் எழுதப்பட்டது.

நிக்கோதேமுவை போலில்லாமல், தேவனுடைய வார்த்தைகளோடு சரியாக அனுபவமில்லாத நபருடன் நாம் வார்த்தைகளோடு குறித்து சாட்சி சொல்லுகிறபோது, கிறிஸ்து எவ்விதமாக மேசியாவாக மற்றும் உலக இரட்சகராக அவதரித்தாரோ நாம் பைபிள் தீர்க்கதரிசனங்களை உபயோகித்து மிக நன்றாக விவரிக்கலாம். வாக்குதத்தம் செய்தவர் தேவன். ஆகவே அவற்றை நிறைவேற்றுகிறவர்கூட அவரே.

உலகத்திற்கு ஒளியான குமாரனை ஒதுக்கி தள்ளுபவர்களோடு சேர வேண்டாம் என்று இங்கே கர்த்தர் நிக்கோதோமுக்கு. ஒரு எச்சரிக்கை கொடுக்கிறார். இந்த சந்தர்ப்பத்திலேயே பரிசுத்த பைபிளில் மிக முக்கியமான வசன பாகத்தை இங்கே நாம் கவனிக்கக்கூடும். (யோவா 3:16) தனக்கு பரீட்சை வைப்பதற்காக மற்றும் சிக்கலில் மாட்டி வைப்பதற்கு வருகிறவர்களைப் போல செல்லாமல் அக்கரையோடு, ஊக்கத்தோடு தன்னிடத்தில் விசாரணைக்காக வந்த நிக்கோதோமுவை கர்த்தர் கவனித்து சரியாக மிக நன்றாக சுவிஷேசத்தை அவனுக்கு கொடுக்கிறார். நம்மிடத்திற்கு வருகிறவர்களை நாம் கூட இதேவிதமாக நன்றாக கவனித்து சுவிஷேசத்தை கொடுக்க வேண்டும். இதன்மூலம் அவர்கள் நம்மிடத்திலிருந்து சுவிஷேச சாட்சியத்தை எந்தவிதத்தில் பெற்றுக் கொள்வார்களோ என்பதை நாம் மிக நன்றாக அறிந்துக் கொள்ளக்கூடும். யார் யார் நம்மை மனப்பூர்வமாக கேள்வியெழுப்புகிறார்களோ அவர்களுக்கு சுவிஷேசம் மிக நல்லவிதமாக போய்ச் சேரும்படி நாம் செய்ய வேண்டும்.

தப்பான உபதேசங்கள்மீது அல்லது தப்பான மனுஷர்கள் மீது விசுவாசம் உடைய அநேகரை நாம் பார்க்கிறோம். நிக்கோதோமுகூட யூத உபதேசங்கள்மீது மற்றும் சன்ஷெட் ரன் சபையிலே விசுவாசமுடையவன். அப். 24:22. இந்த வசனங்களில் பவுல், ரோம அரசாங்கத்தின்மேல், அவர்களுடைய அதிகாரங்களின்மேல் மற்றும் பணத்தின்மேல் மிகப் பெரிய நம்பிக்கையுடைய பேலிக்ஸ் என்ற அவனுக்கு தன்னுடைய சுவிஷேச சாட்சியத்தை சொல்லுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தான். அதேவிதமாக அப். 26:1 பின்வரும் வசனங்களில் தன்னுடைய அதிகாரத்தின்மேல் மற்றும் தன்னோடு சமரசம் செய்துக் கொண்ட யூதர்கள்மேல் எவ்வளவோ நம்பிக்கையடைந்து இருக்கிற அகரிப்பா இராஜாவோடு பவுல் இயேசு கிறிஸ்துவினுடைய சத்தியங்களைக் குறித்து மற்றும் பாவ மன்னிப்பைக் குறித்து எவ்வளவோ சிறந்த முறையில் விவரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. கிறிஸ்து அல்லாமல் மற்றவர்கள் அல்லாமல் வேறு எதையாகிலும் நம்புகின்றாயா? இவற்றை நாம் தெளிவாக விவரிக்க வேண்டியிருக்கிறது.

## முடிவுரை:

இப்படிப்பட்ட நல்ல ஆவிக்குரிய முறை உதாரணங்களின்மூலம் நாம் கர்த்தரைக் குறித்து மற்றவர்களுக்கு சாட்சிக் கொடுப்பதிலே இன்னும் எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பகிரங்க சத்தியம் ஒன்று இருக்கிறது.

அது அப்போஸ்தலர்களைப் போல நாம் பேச முடியாமற் போகலாம். சரியான நேரத்தில் நாம் ஜென்மித்து நாம் தேவனுக்கு மிகச் சிறப்பாக உபயோகப்படவில்லையென்று நம்முடைய மனசாட்சி நம்மை பாதிக்கக்கூடும். ஆனால் ஊழியப் பாரமுடைய அவசரம் மிக முக்கியமானதாக நமக்கு காணாமற் போகக்கூடும். ஆனால் நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டிய சத்தியம் ஒன்றிருக்கிறது. நாம் அவரை நேசிப்பதற்கு முன்பே அவரில் அன்பு செலுத்துவதற்கு முன்பே அவர் நம்மை முதலாவது அன்பு செலுத்தி நமக்காக பயங்கரமாக சிரமப்பட்டு, பாடுகளை அனுபவித்து மரித்தார். ஆகவேதான் நம் வேலையைக் காட்டிலும் அவரைக் குறித்து நாம் பேச வேண்டிய அவசரம் எவ்வளவானாலும் இருக்கிறது. அது நம்முடைய அந்தரங்க பொறுப்பாயிருக்கிறது.

ஆகவே நாம் மற்றவர்களை சுவிஷேசம் மற்றும் அப்போஸ்தல காரியங்களின்மூலம் எதிர் கொண்டு, சந்தித்து சாட்சியம் சொல்லி அவர்களுக்கு விவரிக்கின்றபோது எம்மாத்திரமும் கூட சோர்ந்து போகக்கூடாது. நாம் தேவனுடைய சுவிஷேசத்தை வாஸ்தவத்திற்காக இன்னும் எவ்வளவு அதிகமாக மற்றவர்களுக்கு விவரிக்க வேண்டிய அவசரம் என்ன? கீழ்கண்ட விஷயங்களை கவனிக்கவும்.

இதுவரைக்கும் நாம் இந்த அம்சத்தில் நாம் சொல்லிய சங்கதிகளை விரிவாக மற்றும் ஒருமுறை கவனிப்போம்.

உன்னை நேசிப்பவர்களை மற்றும் நீ நேசிப்பவர்களை உண்மையாக நீ தேவனுடைய வார்த்தையின்மூலம் சேர வேண்டியிருக்கிறது.

மற்றவர்களுக்காக உன்னை நீ சுவாதீனப்படுத்திக் கொள்வதற்கு ஊக்கத்தை வெளிப்படுத்து.

பரிசுத்தவான்களுக்கு அனுகூலமாக இருந்து உன்னைக் குறித்து எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் பகிரங்கமாக தெரியப்படுத்து.

மற்றவர்களுடைய மனதிலே கர்த்தரைக் குறித்து ஆலோசனை மேலெழும்பும்படி நீ அவர்களுக்கு சுதந்திரமான, சுயமான சாட்சி சொல்ல வேண்டியிருக்கிறது.

தேவனுடைய வார்த்தையை கவனமாக தியானித்து நல்ல உதாரணங்களை தேர்ந்தெடுத்து நல்ல விஷயங்களை சாட்சிகளுக்கு ஒன்று சேர்த்து ஜோடிக்க வேண்டும்.

நீ சொல்லிய வார்த்தையின்மூலம் உனக்கு மற்றவர்களுக்கு கூட்டுப் பீடத்தை ஏற்பாடு செய்துக் கொண்டு அவர்களிலே கேட்கக்கூடிய காதை ஏற்பாடு செய்துக் கொண்டு அவர்களோடு உறவு கலந்து இருக்க வேண்டும்.

மற்றவர்களோடு எவ்விதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமல் நீ வார்த்தை சாட்சியத்தை சாத்யமானவரைக்கும் முடிக்க வேண்டியிருக்கிறது.

மற்றவர்களுடைய வேஷத்தை நீ கண்டிக்கும்போது நீ வேஷதாரியாக இருக்கக்கூடாது.

மற்றவர்கள்மீது இருக்கிற உன்னுடைய அன்பை நல்ல. சரியான வார்த்தைகள்மூலம் வெளிப்படுத்து, அவசரமானால் செய்கையின்மூலம், கிரியைகளின்மூலமும் கூட வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.

சாதாரணமான சம்பாஷனையின்மூலம் ஆரம்பித்து சம்பாஷனைக்குள்ளாக மாறும்படி ஜாக்கிரதைப்பட வேண்டும்.

பாவத்தைக் குறித்து பேசுகிறபோது நியாயப் பிரமாணம் மூலம் அதிகாரப் பூர்வமாக சொல்ல வேண்டும் மற்றும் இரட்சிப்பைக் குறித்து பேசுகின்ற போது சுவிஷேசத்தின் மூலம் சமாதானம் சொல்ல வேண்டும்.

முக்கியமான வார்த்தை அம்சங்கள் ஞானமான பிரசங்க சாட்சிகள் கட்ட வேண்டும்.

மிகவும் கஷ்டமான, கடினமானவர்களை நியாயப் பிரமாணத்தினுடைய முள்ளுகளோடோ விட்டு விடுங்கள்.

கிறிஸ்துவுக்கு மற்றும் மற்றவர்களுக்கு இருக்கிற வித்தியாசங்களை தெளிவாக சொல்லுவதில் ஜாக்கிரதைப் படுங்கள். வார்த்தையின்மூலம் ஆத்மா மற்றவர்களோடு கிரியை நடப்பிக்கும் வரைக்கும் பொறுமை காத்திருங்கள். மற்றவர்களை நாம் கண்டிப்பாக வார்த்தையின்மூலம் சந்திப்பதற்கு முன்பு மற்றும் பின்னால் ஜெபம் செய்யுங்கள்.

நமக்கிருக்கிறது ஒரே ஒரு வாழ்க்கைதான், அதுகூட சீக்கிரமாய் கடந்து போவதே. கிறிஸ்துவுக்காக நடைபெறச் செய்த கிரியை மாத்திரமே மீதியாகும். கிறிஸ்துவுக்காக சேவை ஊழியம் செய்வதற்கு உனக்கு சக்தியை தயை செய்வாராக.

**ரெவரன்ட். டேவிட் க்யூனிக்**
**Rev. DAVID KOENIG**
CLC - Missionary,
India and Nigeria.